# ஸப்ர் எனும் பொறுமை

[ Tamil – **தமிழ்** – تاميلي ]

## அஷ்ஷெயிக்

## இப்னு கய்யிம் அல் ஜவ்Zசிய்யா

"உத்தத் அஸ் ஸாபிரீன் வ தாகிராத்"

என்ற நூலின் சுருக்கம்.

**தமிழாக்கம்**

**ஜாசிம் இப்ன் தஇயான்**

2014 - 1435

IslamHouse.com

# الصبر

« من كتاب عدة الصابرين وذخيرة الشاكرين »

« باللغة التاميلية »

إبن قيم الجوزية

ترجمة: جاسم بن دعيان

2014 - 1435

IslamHouse.com

# ஸப்ர் – பொறுமை

## அஷ்ஷெயிக் இப்னு கய்யிம்

அல் ஜவ்Zசிய்யா எழுதிய
“உத்தத் அஸ் ஸாபிரீன் வ தாகிராத்”
என்ற நூலின் சுருக்கம்.

**பொறுமைக்கு வரைவிளக்கணம்**

ஸப்ர் என்ற அரபு வார்த்தை தடுத்து வைத்தல், விலகி இருத்தல், நிறுத்தி வைத்தல் போன்ற அடிப்படை அர்த்தங்களை கொண்டது. அரபு மொழியில், “இன்னார் (ஸப்ரன்) பொறுமை யுடன் கொல்லப்பட்டார்.” என்று ஒரு கூற்று உண்டு. அதாவது, அந்த மனிதர் சாகும் வரை சிறையில் அடைக்கப்பட்டார் என்பது பொருளா கும். ஆன்மீக முறையில் கூறுவதானால், ஸப்ர் என்பது நம்பிக்கை இழக்காது, பீதி அடையாது இருத்தல், முறையீடு செய்வதிலிருந்து எமது நாவை தடுத்துக் கொள்ளுதல், துயரங்கள், நிம்மதியின்மை போன்ற சந்தர்ப்பத்தில் எமது கைகளால் முகத்தில் அடித்துக் கொள்ளாது, ஆடைகளை கிழித்துக் கொள்ளாது தடுத்துக் கொள்ளல் போன்ற கருத்துக்களை கொண்டுள்ளது.

## பொறுமையை பற்றி மார்க்க அறிஞர்கள் கூறுவது என்ன?

பொறுமை என்பது மனிதனின் உயர்ந்த குணம் அல்லது சாதகமான மனோநிலையின் காரணமாக நன்மை பயக்காத காரியங்களில் ஈடுபடுவதிலிருந்து விழகியிருத்தல் என சில அறிஞர்கள் விளக்கம் கூறியுள்ளார்கள். பொறுமை யில்லாத மனிதர்கள் சரியான, பயனுள்ள முறையில் வாழ முடியாது.

“பொறுமை உள்ளவன் கஷ்டங்களை சமாளிக்க பழகிக் கொண்டவன்”, என அபு உத்மான் குறிப்பிட்டார்கள்.

“பொறுமை என்பது அல்லாஹ்வுக்கு நெருக்க மாகி, அல்லாஹ்வின் சோதனைகளை முறையிடாமல், அல்லது வேதனை படாமல், அமைதியோடு ஏற்றுக் கொள்ளுதல்,” என அம்ர் இப்ன் உத்மான் அல் மக்கி கூறினார்கள்.

“பொறுமை என்பது, அல் குர்ஆனும் சுன்னாஹ்வும் கூறும் சட்டங்களை பின் பற்றுதல்” என்று அல் ஹஃவ்வாஸ் குறிப்பிட்டார்.

“பொறுமை என்பது முறைப்பாடு செய்யாது இருத்தல்.” என இன்னுமொரு மார்க்க அறிஞர் கருத்து தெரிவித்தார்.

““பொறுமை என்பது அல்லாஹ்விடம் உதவி தேடுதல்.” என்று அலி இப்னு அபி தாலிப் ரழியல்லாஹுஅன்ஹு கருத்து தெரிவித்தார்கள்.

## கஷ்டமான சந்தர்ப்பத்தில் பொறுமையுடன் இருப்பது சிறந்ததா? அல்லது பொறுமை தேவைப்படாத முறையில் வாழ்வது சிறந்ததா?

“பொறுமை என்பது, வாழ்க்கையில் வசதியான, கஷ்டமான நேரங்கள் என்று வித்தியாசம் பாராது எல்லா நிலையிலும் திருப்தி யுடன் வாழ்தல்” என்று அபு முஹம்மத் அல் ஹரீரி கருத்து தெரிவித்தார்கள்.

ஆனால் இப்னு கய்யிம் ஆகிய நான் இவ்வாறு கூறுகிறேன். “இது மிகவும் கஷ்டமானதொன்றாகும். இவ்வாறு இருக்குமாறு நாம் கட்டளையிடப் படவில்லை. இலேசான நேரங்களுக்கும், கஷ்டமான நேரங்களுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை எங்களால் உணர முடியும். எங்களால் செய்யக் கூடியதெல்லாம், பெரும் மனக் கஷ்டம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் தைரியம் இழக்காது இருப்பதுதான். பொறுமை என்பது வாழ்வில் இலேசான சந்தர்ப்பத்திலும், கஷ்டமான நேரத்திலும் ஒரே விதமான உணர்வோடு இருப்பதல்ல. இது எங்கள் கட்டுப் பாட்டுக்கு அப்பாற்பட்டது. அதோடு அது எங்கள்

இயற்கையான சுபாவத்தின் ஒரு அங்கமுமல்ல. கஷ்டமான நிலையில் வாழ்வதை விட, வசதியான நிலையில் வாழ்வது எமக்கு சிறந்தது. முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம் அவர்கள் அல்லாஹ் விடம் கேட்ட ஒரு துஆவில் "(யா அல்லாஹ!) நீ என்னோடு கோபப்பட வில்லை என்றால் எனக்கு எது நடந்தாலும் எனக்கு கவலையில்லை. எனினும், உன்னுடைய ஆசீர்வாதமும் உபகாரமும் கிடைப்பதை நாடுகிறேன்." என்று யாசித்தார்கள்.

ஆனால் இந்த துஆ "பொறுமையை விட சிறந்த பரிசு ஒருவருக்கும் கொடுக்கப் படவில்லை" என்ற ஹதீஸை மறுக்க வில்லை. காரணம், ஒருவருக்கு சோதனை அல்லது துன்பம் ஏற்பட்ட பின் உள்ள நிலையை அந்த ஹதீஸ் விபரிக்கிறது. எனினும், இலேசான, வசதியான நிலையே சிறந்தது.

## பொறுமையும் முறையிடுதலும்

ஷக்வா எனும் முறையிடுதல் இரு வகைப்படும். முதலாவது வகை அல்லாஹ்விடம் முறையிடதாகும். இது பொறுமையை மறுக்க வில்லை. இது எல்லா நபிமார்களாலும் செய்யப் பட்டது. உதாரணமாக, யாகூப் நபி அலைஹிஸ் ஸலாம், தனது மகன் யூசுப் அலைஹிஸ் ஸலாம்

காணாமல் போன போது, *“என்னுடைய துக்கத்தையும் கவலையையும் நான் முறையிடுவதெல்லாம் அல்லாஹ்விடமே தான்.”* என்று கூறினார்கள். அர்ஆன் கஉ ;அசூ.

நபி யாகூப் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் “எனக்கு மிகவும் பொருத்தமான அழகிய பொறுமை” எனப் பொருள் படும் “ஸப்ருன் ஜமீல்” எனும் வார்த்தையை கூறினார்கள்.

நபி அய்யூப் அலைஹிஸ்ஸலாம் கூறிய வார்த்தை யை குர்ஆன் இவ்வாறு குறிப்பிடுகிறது.

*(நபியே!) அய்யூபையும் (நினைவு கூர்வீராக) அவர், தன் இரட்சக னிடம், “ நிச்சயமாக துன்பம் என்னை பீடித்துக் கொண்டது.”* (என்று கூறினார்) சூரா அன்பியா உக; அங.

பொறுமையின் சிகரமாகிய முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், “ யா அல்லாஹ்! எனது பலஹீனத்தையும், நிர்க்கதி யான நிலையையும் உன்னிடமே முறையிடு கிறேன்.’ என்று இறைவனிடம் இறைஞ்சினார்கள். மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள், “யா அல்லாஹ்! எல்லா புகழும் உனக்கே உரியன. முறையீடுகள் உன்னிடமே சொல்லப் படுகின்றன. உன்னிடம் மாத்திரமே நாம் உதவி தேடுகிறோம். உன்னையே நாங்கள் விசுவாசம் கொள்கிறோம்.

உன்னுடைய உதவியை தவிர, வேறெந்த சக்தியும் இல்லை.” என்று பிரார்த் தனை புரிந்தார்கள்.

எங்கள் வார்த்தைகள் மூலம் மக்களிடம் நேரடியாகவோ அல்லது எமது தோற்றம், பார்வை, எமது நடத்தை மூலம் மறைமுகமாக முறையிடுவது இரண்டாவது வகையாகும். இவ்வாறு முறையிடு வது பொறுமைக்கு மாற்றமாகும்.

**ஒன்றுக்கொன்று முரணான சக்திகள்**

உளவியல் சாஸ்திரப்படி, ஒவ்வொரு மனிதருக் குள்ளும் இரண்டு சக்திகள் செயல் படுகின்றன. “செயல் புரியும் சக்தி” அவனை முன்னால் தள்ளிக் கொண்டு செல்லும்போது, அவனது “தடுக்கும் சக்தி” அவனை தடுக்கிறது. “செயல் புரியும் சக்தி” எம்மை நற்காரி யங்களின் பக்கம் இட்டுச் செல்லும் போது, “தடுக்கும் சக்தி” எமக்கும் மற்றவர்களுக்கும் தீங்கு ஏற்படா வண்ணம் பாதுகாக்க, எமது பொறுமை எனும் குணம் கட்டுப் படுத்துகிறது.

சில மனிதர்கள், தமக்கு நன்மை எற்படும் விஷயங்களில் பொறுமையுடன் செயல் புரிவார் கள். ஆனால், துன்பங்கள், ஆபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில், அவர்களுடைய பொறுமை மிகவும் பலஹீனமாக இருப்பதை காண்கிறோம். தொழுகை, நோன்பு, ஹஜ் போன்ற வணக்க வழிபாடுகளில் பொறுமையோடு செயல் புரியும்

மனிதன், தனது ஆசாபாசங்களை கட்டுப்படுத்துவதில் பொறுமையை கடை பிடிக்க முடியாது தவிக்கிறான். இதன் மூலம் அவன் ஹராமான விஷயத்தையும் செய்யக் கூடும். அது போன்று, சில மனிதர்கள் தடுக்கப் பட்ட காரியங்களை விட்டும் விழகி இருப்பதில் மிகவும் பொறுமையுடன் இருந்தாலும், அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அடி பணிவதிலும், இபாதாவில் ஈடுபடுவதிலும் அவர்களுடைய பொறுமை மிகவும் பலஹீனமாக இருக்கிறது. சிலருக்கு இவ்விரண்டு விஷயங்களிலும் பொறுமை கிடையாது. ஆகையால் இபாதாவில் ஈடுபடுவதிலும், ஆசைகளை கட்டுப் படுத்துவதிலும் பொறுமயுடன் செயல் புரிபவனே சிறந்தவன். சூட்டையும், குளிரையும் தாங்கிக் கொண்டு நள்ளிரவில் நின்று தொழுவதில் பொறுமை காட்டும் மனிதன், பெண்களை கண்டால் தன் கண்களை தாழ்த்திக் கொள்வதில் பொறுமை இழந்து நிற்கிறான். இன்னொரு மனிதன், தன் பார்வையை தாழ்த்திக் கொள்வதில் பொறுமை காட்டினாலும், நல்லதை எவி தீமையை தடுப்பதில் பொறுமை காட்ட முடியாது தவிக் கிறான். பொறுமையற்ற காரணமாக அல்லாஹ்வை மறுப்போருக்கும், இணை வைப்போருக்கும் எதிராக எவ்வித முயற்சியும் அவனால் செய்ய முடியாது போகிறது. பெரும் பான்மையான மக்கள்

ஏதோ ஒரு வகையில் பொறுமை யின்றி இருப்பினும், வேறும் சில மனிதர்கள் எல்லா விஷயங்களிலும் பொறுமை இழந்து தவிக்கிறார்கள்.

**பொறுமை பற்றிய மேலும் சில வரைவிளக்கனங்கள்**

பொறுமையாக இருப்பது என்பது, மனிதனின் பகுத்தறிவும் மார்க்கப் பற்றுதலும் அவனுடைய ஆசா பாசங்களை விட பலமாக இருப்பதாகும். மனிதன் தனது உள்ளத்தில் எழும் ஆசைகளின் பாக்கம் சாய்வது இயற்கையாயினும், பகுத்தறிவும் மார்க்கப் பற்றுதலும் அவனை தடுத்து கட்டுப் படுத்த வேண்டும். இவ்விரு சக்திகளுக்கிடையில் பெரும் போராட்டம் நிகழ்கிறது. சில சந்தர்ப்பங்களில் மார்க்கமும் பகுத்தறிவும் வெற்றிபெறும். இன்னுமொரு சந்தர்ப்பத்தில் ஆசைகளும் உணர்ச்சிகளும் வெற்றியீட்டும். இந்தப் போர்களம் அவனுடைய உள்ளமே.

பொறுமைக்கு வேறு பெயர்களும் உள்ளன. காமாசைகளை அடக்கியாளும் போது அது கௌரவம் என அழைக்கப்படுகிறது. அவ்வாறு அடக்கி கொள்ள முடியாத போது அதனை விபசாரத்தில் ஈடுபடுதல், ஒழுக்கமற்ற பாலியல் என்று அழைக்கப்படுகின்றது. தனது வயிற்றை (பசியை) அடக்கிக் கொள்ளும் போது, அது சுய

கட்டுப்பாடு எனப் படும். அதற்கு முறணாகும் போது அதனை பேராசை எனப்படும்.வெளிப் படுத்தக் கூடாத இரகசியங்களைப் பற்றி மௌனமாக இருந்தால் அதனை விவேகம் என்பார்கள். அதற்கு மாறாக இரகசியங்களை வெளியிடும்போது, பொய், பழிச்சொல், அவதூறு எனறெல்லாம் கூறுவார்கள். தனது தேவைக்கு வேண்டியவைகளை கொண்டு திருப்தியுடன் வாழ்வது மிதமான தன்மை என போற்றப்படும். அதற்கு மாற்றமான குணத்தை, பிறரின் பொருளுக்கு ஆசைப் படுதல் என்று தூற்றப் படும். தனது கோபத்தை அடக்கிக் கொள்பவனை சகிப்புத் தன்மை என்று கூறவார்கள். அதற்கு எதிரான குணத்தை உணர்ச்சி வசப்படுதல், அஜாக்கிறதை யாக செயல்படுதல் என்பார்கள். அவசரமில்லாது, நிதானமாக செயல் புரிந்தால் அது வசீகரமான, உறுதியான செயல் என்று போற்றப் படும். அதற்கு மாறாக நடந்துக் கொண்டால் கண் மூடித்தனம் என்று தூற்றப் படும். எதிரியை கண்டு பின் வாங்கி ஓடுவதை தவிர்த்தால் அதனை வீரம் என்பார்கள். அதற்கு மாறாக பின் வாங்கி ஓடினால் கோழைத் தனம் என்பார்கள். தனக்கு ஏற்பட்ட நஷ்டத்துக்கு தண்டனை கொடுப்பதை விட்டும் நீங்கிக் கொண்டால் அதற்கு மன்னிக்கும் மனப் பாண்மை என்பார்கள். அதற்கு மாறாக நடந்தால் பழி

வாங்குதல் என்பார்கள். கஞ்சத் தனத்தை விட்டும் நீங்கினால் தாராள மனப்பான்மை எனபார்கள். அதற்கு எதிராக நடந்தால் கருமி என்பார்கள். சோம்பல், கையாலாகாத தன்மை ஆகியவைகளை விட்டும் விழகினால் சுறுசுறுப்பு, சுயமாக இயங்கும் ஆற்றல் என்பார்கள். மற்றவர்கள் மீது குற்றம், குறை கூறாவிட்டால் அதனை ஆண்மைத்தனம் என்று கூறுவார்கள்.

பொறுமையை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு பெயர்கள் கொண்டு அழைத்தாலும், இவை யாவும் பொறுமை என்ற தன்மையை காட்டும். இஸ்லாம் முழுமையாக பொறுமை மீது எழுப்பப் பட்டது என்பதை இவை சுட்டிக் காட்டுகின்றன.

## பொறுமை எனும் குணத்தை எங்களால் அடைய முடியுமா?

ஒருவரிடம் பொறுமை இயற்கையாக அமையா விட்டாலும், அந்த சுபாவம் தனக்குள் அமைந்திருக்கிறது என்ற உணர்வோட தொடர்ந்து செயல் படத்துவங்கும் போது, காலம் செல்லச் செல்ல பொறுமையை கடைபிடிக்க பழகிக் கொள்ள முடியும். இதைப் பற்றி நபி (ஸல்) பின் வரும் ஹதீஸில் இவ்வாறு கூறினார்கள். “எவரொருவர் பொறுமையுடன் இருப்பதற்கு

முயற்சி செய்கிறாரோ, அல்லாஹ் அவருக்கு பொறுமையுடன் இருப்பதற்கு உதவி செய்வான்." ஒருவர் காம இச்சைகளை அடக்கியாள முயற்சி செய்து, பார்வையை தாழ்த்திக் கொண்டால் அந்த ஒழுக்கம் அவருக்கு இலேசாக்கிக் கொடுக்கப் படும். இதே போன்று உறுதி, தாராள மனப்பான்மை, தைரியம் போன்ற ஏனைய நற்பண்புகளை பயில்வதற்கும் முடியும்.

## பொறுமையின் பல்வேறு தரங்கள்

பொறுமை இரண்டு வகைப் படும், அதாவது, உடல் ரீதி, உள ரீதி எனும் இரண்டிலும் விரும்பியோ அல்லது விரும்பாமலோ பொறுமை பின் வருமாறு இடம்பெறும்.

1. கஷ்டமான வேலையை விரும்பிச் செய்யும் போது, அது உடல் ரீதியாக தேர்ந்தெடுக்கப் பட்ட பொறுமையாகும்.

2. சுகவீனத்தை, உடம்பில் விழும் அடியை, கடும் வெப்பம், கடும் குளிர் ஆகியவைகளை தாங்கிக் கொள்ளும்போது அது விருப்ப மின்றி ஏற்றுக் கொண்ட பொறுமையாகும்.

3. உள ரீதியான பொறுமை என்பது ஷரீஆவும், பகுத்தறிவும் எச்சரிக்கை செய்யும் பாவங்களை விட்டும் நீங்குதல்.

4. நேசித்தவரை விட்டும் கட்டாயமாக பிரிந்து வாழவேண்டிய நிலை, விருப்பமில்லாத உள ரீதியான பொறுமை எனப்படும்.

**பொறுமையின் வித்தியாசமான தரங்கள்**

மேலே குறிப்பிட்டபடி பொறுமை என்பது விரும்பியோ அல்லது கட்டாயத்தின் காரணமாகவோ ஏற்றுக் கொள்ளல் என இரு வகைப் படும். விரும்பி ஏற்றுக் கொள்ளும் பொறுமை, விருப்பமின்றி ஏற்றுக் கொள்ள வேண்டிய பொறுமையை விட மேலானது. காரணம், விருப்பில்லா விட்டாலும் பொறுமையுடன் இருப்பதற்கு எவருக்கும் நேரிடும், ஆனால் விரும்பியே பொறுமையுடன் இருப்பது எல்லோருக்கும் முடியாத செயலாகும். இதன்படி, நபி யூசுப் (அலை) அவர்களை சகோதரர்கள் கிணற்றில் தூக்கிப் போட்டது, அவருடைய தந்தையிடமிருந்து பிரித்தது, அவரை சகோதரர்கள் அடிமை என விற்றது போன்ற சந்தர்ப்பங்களில் கடை பிடித்த பொறுமையை விட, அஸீஸுடைய மனைவியின் கட்டளையை மீறி அதன் விளைவாக தண்டனையை ஏற்றபோது கடைபிடித்த பொறுமை

மிகவும் உயர்ந்தது. விரும்பி ஏற்றுக் கொண்ட இந்த உயர்ந்த பொறுமை இப்ராஹிம், மூஸா, நூஹு, ஈசா (அலை) மற்றும் முஹம்மத் (ஸல்) அவர்கள் போன்ற நபிமார்களின் பொறுமையாகும். இந்தப் பொறுமை மக்களை நேர் வழிக்கு அழைப்பதற்கும், அல்லாஹ்வின் விரோதிகளுக்கு எதிராக முயற்சி செய்யவும் நபிமார்கள் விருப்பத் துடன் ஏற்றுக் கொண்டதாகும்.

## மனிதர்களின் பொறுமையும் மிருகங்களின் பொறுமையும்

மேலே குறிப்பிட்ட நான்கு வகை பொறுமைகள் மனிதர்களுக்கு மாத்திரம் உரியன. பிராணிகளுக்கு இரண்டு வகையான பொறுமை தான் உள்ளன. காரணம் மிருகங்களுக்கு சுயமாக சிந்தித்து தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் இல்லை. தானாக விரும்பி சுதந்திரத்துடன் தேர்ந்தெடுக்கும் பொறுமையின் காரணமாக மனிதன் ஏனைய படைப் பினங்களிலிருந்து வேறுபடு கிறான். ஆனால் மனிதர்களில் பெரும்பாலோரிடம் மிருகங்க ளின் சுபாவமான சுதந்திரமற்ற பொறுமையை தான் காண முடிகிறது.

## ஜின்களின் பொறுமை

மனிதர்களை போன்றே ஜின்களுக்கும் தமது செயலுக்கு பொறுப்புள்ள காரணத்தால், மனிதர்க

ளின் பொறுமையை போலவே ஜின்களின் பொறுமையும் உள்ளது. மனிதர்களைப் போன்று அல்லாஹ்வின் கட்டளைக்கு அடி பணியும் பொறுப் புள்ள காரணத்தால், ஜின்களுக்கும் பொறுமை தேவைப் படுகிறது. எங்களுக்கு உள்ள பொறுப்பு கள் போன்றே ஜின்களுக்கும் பொறுப்புகள் உள்ளதா? அல்லது அவை வித்தியாசமானவையா? என்று எமக்கு கேள்வி எழக் கூடும். உணர்ச்சிகள், ஆசாபாசங்கள் போன்ற விடயங்களில் ஜின்களும் எம்மை போன்றே பொறுப்பு உள்ளவர்கள் என்றே பதில் அமையும். அல்லாஹ்வுக்காக ஒருவரை நேசிக்கும், அல்லாஹ்க்காக ஒருவரை வெறுக்கும் கடமையும், உறுதியுடன் விசுவாசம் கொள்ளவும், விசுவாசிகளை நண்பர் களாக, விசுவாசம் கொள்ளாதவர்களை எதிரிகளாக கருதவும், ஜின்க ளுக்கு பொறுப்புண்டு. எனினும் உடல் ரீதியான குசுல், வுது, மலசலம் கழித்த பின் தம்மை சுத்தம் செய்துக் கொள்ளல், கத்னா போன்ற விடயங்களில் ஜின்கள் எம்மை விட்டும் மாறு பட்டவர் கள். அவர்கள் படைக்கப் பட்ட அமைப்பின் படி அவர்களது பொறுப்பும் கடமையும் அவர்களுக்கு உண்டு.

## மலக்குகளின் பொறுமை

மலக்குகளுக்கு பொறுமை உண்டா? என்பது அடுத்த கேள்வியாகும். சுயமாக முடிவு செய்யும் அறிவுக்கு முரணான ஆசாபாசங்கள் மூலம் மலக்குகள் எந்த பரீட்சைக்கும் ஆளாக்கப் பட வில்லை என்பதே விடையாகும். எமக்கு சுவாசிப்பது அவசியம் என்பது போல் அல்லாஹ்வை துதிப்பதும், அவனுடைய கட்டளை களை செயல் படுத்துவதும் அவர்கள் நடத்த வேண்டிய கட்டாய கடமைகளாகும். ஆகையால் மலக்குகளுக்கு பொறுமை அவசிய மில்லை. மதம், பகுத்தறிவு ஆகியவைக்கு முறனான, உணர்ச்சிகள், ஆசாபாசங் கள் என்பன இருந்தால் தான் பொறுமை தேவைப் படுகிறது. எனினும், தாம் படைக்கப் பட்ட நோக்கத்துக்காக செய்ய வேண்டிய காரியங்களை தொடர்ந்து செய்வதற்கு தேவையான, அதன் மூலம நன்மை பெறக் கூடிய பொறுமை மலக்குகளுக்கு உண்டு.

## மனிதனின் பொறுமை

மனிதனின் ஆசாபாசங்களை விட அவனுடைய பொறுமை வலுவாக இருந்தால், அவன் மலக்குகளை போலாவான். மாறாக, அவனுடைய ஆசைகள் அவனுடைய பொறுமையை விட சக்தி வாய்ந்ததாக இருந்தால் அவன் ஷைத்தானைப் போலாவான். அவனிடம் உணவு,

குடி, காமம் போன்ற ஆசைகள் அவனுடைய பொறுமையை விட வலுவாக இருந்தால், அவன் மிருகத்தை விட கேவலமாக மாறுகிறான்.

“ஆசைகள் இல்லாத, நன்மை தீமைகளை பிரித்தறியக் கூடிய தன்மையுடன் மலக்குகளையும், ஆசைகளுடன், ஆனால் நன்மை தீமைகளை பிரித்தறிய தெரியாத தன்மையுடன் மிருகங்களை யும், ஆசைகள் உள்ள ஆனால், நன்மை தீமைகளை பிரித்தறியக் கூடிய தன்மையுடன் மனிதனையும் அல்லாஹ் படைத்தான்.” என்று கதாதா (ரழி) கூறினார்கள். ஆகையால், மனிதனின் ஆசைகளை விட அவனது பகுத்தறிவு சக்தி வாய்ந்த தாக இருந்தால், அவன் மலக்குகளை போலாவான். ஒரு சிறிய குழந்தைக்கு பசிக்கு உணவு மாத்திரம் தேவையாக உள்ளதால், அக்குழந்தை அந்த வயதில் மிருகத்தின் தன்மை கொண்டுள்ளது. வயதுடன் அறிவும் வளரும் வரை, அவனுக்கு வேறு எந்த வழியும் இல்லை. விளையாடும் வயதில் அவனு டைய பொறுமையும் வளர்ச்சி அடைகிறது. அவனுள் காமாசை வளரும் வயதில், பொறுமை பற்றிய அறிவும் நன்மை தீமையை பிரித்தறியும் திறமையும் வளர்ச்சி அடைகிறது. இப்பருவத்தில் தன் வாழ்க்கைக்கு தேவையானவைகளை மாத்திரம் பின் பற்றும் அவனுக்கு, வாழ்க்கை நல்லதாக அல்லது கெட்டதாக அமைவ தற்கு என்ன தேவை

என்பது மாத்திரம் புலனாகும். அல்லாஹ் நேர்வழி காட்டும் வரை இப்படிப் பட்ட நிலையிலேயே அவன் இருக்க நேரிடும். அவனது பருவ வயதில் அல்லாஹ்வின் வழி காட்டலின் மூலம், இவ்வுலகத்துக்கும், மறுமைக்கும் தன் செயலினால் ஏற்படும் விளைவுகளை பற்றி அவனுக்கு விளங்கும். தான் செல்ல வேண்டிய நீண்ட பாதையையும், அதில் ஏற்படக் கூடிய விளைவு களையும் பற்றி புரிந்துக் கொள்ளும் அவன் இயற்கையாக எழும் உணர்ச்சிகளுக்கும் ஆசாபாசங்களுக்கும் மத்தியில் அப்பயணத்துக்கு தன்னை தயார் படுத்திக் கொள்வான்.

## பொறுமையின் பல்வேறு நிலைகள்

ஆசாபாசங்களினால் ஏற்படும் விளைவுகளை தரப்படுத்து வதன் மூலம் அவற்றை கட்டுப் படுத்தும் ஒருவரின் பொறுமையை தரப்படுத்த முடியும். பொறுமையில் மூன்று நிலைகள் உள்ளன.

1. ஆசா பாசாங்களை அடக்கியாளும், அவற்றை வெற்றி கொள்ளும் முயற்சியில் மதம் முக்கிய இடத்தை வகிக்கிறது. தொடர்ந்து

பொறுமையை கடைபிடித்த இந்த உத்தமர்கள், உலகிலும் மறுமையிலும் வெற்றி பெற்றனர். ”நிச்சயமாக ‘எங்கள் இரட்சகன் அல்லாஹ்தான்” என்று கூறி பின்னர் அதில் உறுதியாக நிலைத்துமிருந்தார்களே” (சூறா புஸ்ஸிலாத் சக/ந0) அவர்கள்.

இவர்கள் மரணிக்கும்போது, மலக்குகள் அவர்களிடம் வந்து “நீங்கள் பயப்படாதீர்கள், கவலையும் படாதீர்கள். நீங்கள் வாக்களிக்கப்பட்ட சுவனபதியை கொண்டு நன்மாராயம் பெறுங்கள். நாங்கள் உலக வாழ்விலும், மறுமையிலும் உங்களுக்கு உதவியாளர்களே.....” (சூறா புஸ்ஸிலாத் சக/நக) என்று கூறுவர்.

அல்லாஹ்வுடைய நட்பின் பாக்கியம் பெற்ற இப்படிப் பட்டவர்கள் அல்லாஹ்வின் பாதையில் முயற்சி செய்த இறை நேசர்கள். இவர்களை அல்லாஹ்வே நேர்வழி நடத்தியவன்.

2. மனிதனின் உள்ளத்தில் ஆசைகள் அதிகரிக்கும் போது, மார்க்கத்தின் நோக்கம் அவனுள் தளர்ச்சி அடைகின்றன. இத்தகைய மனிதன், ஷெய்தானுடைய சக்திக்கு முழுமையாக சரணடைந்து, ஷெய்தான் காட்டும் வழியை பின்பற்று

வான். இத்தொடர்ப்பின் காரணமாக பின்வரும் இரு விளைவுகளில் ஒன்று நடைபெறும். இம்மனிதன் பலஹீனமான ஒருவனாக இருந்தால் ஷெய்தானின் படையில், கட்டளைகளை பின் பற்றும் ஒரு சிப்பாயாக மாறுவான். இம்மனிதன் சக்தி வாய்ந்தவனாக இருந்தால், அல்லாஹ்வுக்கு எதிரான செயல்களில், ஷெய்தானை ஒரு ஆயுதமாக உபயோகப் படுத்துவான். மறுமைக்குப் பதிலாக இவ்வுலக வாழ்க்கையில் மோகம் கொண்ட இம் மனிதர்களை துரதிஷ்டம் பீடித்துக் கொண்டதற்கு காரணம் அவர்கள் பொறுமை இழந்தது தான். பொய், வஞ்சகம், பேராசை, மோகம், தற்புகழ்ச்சி, நற்காரியம் செய்வதை தாமதப் படுத்தல், என்றும் நிலையான ஆகிராவின் இலாபத்திற்கு பதிலாக இவ்வுலகில் கிடைக்கும் தற்காலிக இலாபம் தேடுதல் ஆகியன இவர்களது செயல் முறையாகும். நபி (ஸல்) அவர்கள் இப்படிப் பட்ட மனிதர்களைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்கள்.

" வீண் கற்பனையில் மூழ்கி, தன் ஆசா பாசங்களை பின் பற்றும் மனிதன் உண்மையில் உதவியற்றவன்."

துரதிர்ஷ்டசாலிகளான இவர்கள் பின்வரும் வகையில் உள்ளனர்.

- ஒரு சாரார் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் எதிராக யுத்தம் பிரகடணம் செய்தவர்களாக, மக்களை அல்லாஹ்வின் பாதையிலிருந்து ஒதுக்கி, பூமியில் விஷமத் தனத்தை பரப்பு கின்றனர்.
- ஒரு சாரார் உலகலாவிய வாழ்வில் மாத்திரம் கவனம் செலுத்துகின்னர்.
- ஒரு சாரார் இரட்டை நாக்குள்ள நயவஞ்சகர் களாக இனிய வார்த்தைகளால் மக்களை தம் வசப்படுத்தி, அதன் மூலம் எப்படியாவது லாபம் பெறுவதையே நோக்கமாகக் கொண்டவர்கள்.
- ஒரு சாரார் காமவெறி பிடித்தவர்களாக, அதையே தேடி அலைபவர்கள்.
- இன்னொரு சாராருக்கு யாரேனும் எச்சரிக்கை செய்தால், தாம் பாவ மன்னிப்பு தேடுவதற்கு விரும்பினாலும், தமக்கு மன்னிப்ப கிடைக்க எவ்வித சாத்தியமுமில்லை என்று பொய் காரணம் கூறுபவர்கள்.

- இன்னொரு சாரார் தமது தொழுகை, நோன்பினால் அல்லாஹ் வுக்கு எவ்வித லாபமும் கிடைக்கப் போவதில்லை. எமது நற் செயலின் மூலம், சுவர்க்கத்தை அடைய முடியாது, ஆனால் அல்லாஹ் அளவற்ற அருளாலன், ஆகையால் அவன் தன் அருளால் சுவர்க்கத்தை நிச்சயமாகக் கொடுப்பான் என்று வாதாடுபவர்கள்.

- இன்னொரு சாரார் பாவங்களை விட்டு நீங்குவதென்பது அல்லாஹ்வின் மன்னிக்கும் தன்மையை மறுப்பதாகும் என்று குதர்க்க வாதம் புரிபவர்கள்.

- இன்னுமொரு சாரார், “எல்லா பாவங்களிலும் மூழ்கிய பின், இப்போது தவ்பா செய்வதால் என்ன பயன் கிடைக்கும்?முழு உடலும் நீரில் மூழ்கிக் கொண்டிருப்பவன், விரலை மாத்திரம் நீருக்கு மேல் வைத்திருப்பதால் என்ன பயன் கிடைக்கும்?” என்று விரக்தியுடன் பேசுபவர்கள்.

- இன்னுமொரு சாரார், மரணம் நெருங்கும் போது நாங்கள் தவ்பா செய்வோம் என்று வீராப்பு பேசுபவர்கள்.

நன்மை தீமையை பிரித்தறியும் ஆற்றலை தமது ஆசா பாசங் களுக்கு அடிமையாக்கிய இந்த மக்கள், தமது பிழையான ஆசைகளை பூர்த்தி செய்வதற்கு அல்லாஹ் கொடுத்த அறிவை உபயோகிக்க வழி தேடுகிறார்கள். இப்படிப்பட்ட மக்களின் அறிவு ஷெய்த்தானால் சிறை பிடிக்கப் பட்டு, தவறான நோக்கங்களுக் காக பயன்படுத்தப்படுகிறது. முஸ்லிம் சிறைக் கைதிகளை பன்றி வளர்ப்பு, மது பானம் தயாரிப்பு, சிலுவைகளை சுமத்தல் போன்ற தவறான காரணங்களுக்காக உபயோகப் படுத்தும் காபிர் மன்னனின் உதாரணத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள். தனது பகுத்தறிவை ஷெய்த்தானுக்கு அடிமையாக்கும் ஒருவன், முஸ்லிமை சிறை பிடித்து அவனை காபிரிடம் ஒப்படைக்கும் கீழ்தரமான காரியத்தை செய்தவனுக்கு சமமானவனாகிறான்.

3. ஒரு பக்கத்தில் பகுத்தறிவு, மதம் ஆகியவைகளின் நோக்கம், இன்னொரு புறத்தில் இச்சைகளின் நோக்கம் ஆகிய இவையிரண்டுக்கும் இடையில் பெரும் போராட்டம் நடைபெறுகிறது. இவைகளுக்கிடையில் வெற்றி தோல்வி மாறி மாறி வரும். நல் அமல்களை, கெட்ட காரியங்களுடன் கலக்கும் ஒரு முஸ்லிமின் நிலை இதுவே.

மறுமையில் மனிதனின் முடிவு மேற் குறிப்பிட்ட மூன்று கூட்டத்தினரின் நிலையை ஒத்திருக்கும். சில மனிதர்கள் நரகத்தை எட்டியும் பார்க்காது சுவர்க்கத்தில் பிரவேசிப்பார்கள். சிலர் சுவர்க்கத்தை கண்களால் ஒருபோதும் காணாது நரகத்தில் பிரவே சிப்பார்களா. வேறும் சிலர் நரகத்தில் சில காலம் தங்கியிருந்து, இறுதியில் சுவர்க்கம் புகுவார்கள்.

## பொறுமையின் பல்வேறு நிலைகள்

சில மனிதர்களுக்கு பொறுமையை கடை பிடிக்க பெறும் போராட்டத்துக்கும் கஷ்டத்துக்கும் ஆளாக நேரிடும். வேறும் சிலருக்கு பொறுமையை கடைபிடிப்பது மிகவும் இலகுவான விஷயமாகும். முதல் வகையை சேர்ந்த மனிதன், பலம் வாய்ந்த எதிரியுடன் முழு மூச்சுடன் மல்யுத்தம் புரிந்து இறுதியில் தோல்வி யடைந்தவனை போன்றவன். பலகீனமான எதிரியுடன் மல்யுத்தம் புரிந்து அவனை தோற்கடித்தவனை போன்றவன் இரண்டாவது வகையை சேர்ந்தவன். இந்த யுத்தம் ரஹ்மானுடைய போர் வீரர்களுக்கும் ஷைத்தானு டைய சிப்பாய்களுக்கும் இடையில் நடை பெரும் யுத்தத்தை போன்றதாகும். ஷைத்தானுடைய சிப்பாயை தோற்கடிக்கக் கூடிய மனிதன், இறுதி யில் ஷைத்தானையே தோற்கடித்து விடுவான்.

அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி) பின்வருமாறு அறிவிக்கிறார்கள். "ஒரு ஜின்னுடன் மல்யுத்தம் புரிந்து அதனை தோற்கடித்த ஒரு மனிதன், 'நீ ஏன் இவ்வளவு பலகீனமாக, மிகச் சிறியவனாக இருக்கிறாய்?' என்று கேட்டார். அதற்கு அந்த ஜின், 'மற்ற ஜின்களுடன் ஒப்பிடும் போது நான் மிகப் பெரியவன், பெரும் பலசாலியாவேன்.' என்று கூறினான்." அதனை கேட்ட ஒருவர், "அந்த மனிதர் உமர் (ரழி) தானா?" என்று வினவினார். அதற்கு அப்துல்லாஹ் இப்னு மஸூத் (ரழி) "அவரைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்?" என்று பதில் கூறினார்.

"ஒட்டகத்தின் மீது பயணம் செய்யும் மனிதன் அந்த ஒட்டகத்தை சாட்டையால் அடிப்பது போல் ஷைத்தானுக்கு ஒரு விசுவாசி சாட்டையடி கொடுக்கிறான்." என்று சில சஹாபாக்கள் கூறினார்கள்.

ஒரு ஷைத்தானை சந்தித்த இன்னொரு ஷைத்தான், "நீ ஏன் இவ்வளவு மெலிந்து பலஹீனமாக இருக்கிறாய்?" என்று விசாரித்தது. அதற்கு அந்த ஷைத்தான், "சாப்பிடும்போது அல்லாஹ்வின் பெயரை கூறும் ஒரு மனிதனோடு நான் இருக்கிறேன். அதனால் அவனுடன் சேர்ந்து என்னால் சாப்பிட முடியாது. அவன் நீர்

அருந்தும்போது அல்லாஹ்வின் பெயரை கூறுவான். அதனால் அவன் நீர் அருந்தும்போது என்னால் நீர் அருந்த முடியாது. அவன் வீட்டுக்குள் நுலையும்போது அல்லாஹ்வின் பெயரை கூறுகிறான். அதனால் நான் வெளியில் நிற்க வேண்டியுள்ளது." என்று பதில் கூறியது.

அதற்கு முதல் ஷைத்தான், "நான் இனைந் துள்ள மனிதன் சாப்பிடும் போது அல்லாஹ்வின் பெயரை கூறுவதில்லை, அதனால் நானும் அவனு டன் சேர்ந்து சாப்பிடுகிறேன். நீர் அருந் தும் போது அவன் அல்லாஹ்வின் பெயரை கூறுவதில்லை. அதனால் நானும் நீர் அருந்துகிறேன். அவன் வீட்டுக்குள் செல்லும் போது அல்லாஹ்வின் பெயரை கூறுவதில்லை. அதனால் நானும் வீட்டுக்குள் நுலைகிறேன்." என்று கூறியது. சில சலபிகளிடமிருந்து இப்ன் அபீத் துன்யா இதனை அறிவிக்கிறார்.

ஆகையால், எவரொருவர் பொறுமையை பழக்கப் படுத்திக் கொள்கிறாரோ அவரது எதிரிகள் அவருக்கு பயப்படுகின்றனர். பொறுமையுடன் இருப்பதை யார் கஷ்டமாக காண்கிறாரோ அவருடைய எதிரிகள் அவரை தாக்கி அவருக்கு துன்பமிழைக்க எப்போதும் தயாராக இருப்பதால் அந்த மனிதர் பெரும் அபாயத்தில் இருக்கிறார்.

**பொறுமை எப்போது நமக்கு தேவைப்படுகிறது?**

வாழ்வில் பின்வரும் நிலைகளில் எமக்கு பொறுமை தேவைப் படுகிறது;

1. அல்லாஹ்வை வழிபட்டு அவன் கட்டளைகளை பின் பற்றும் போது,
2. பாவமான காரியங்களிலிருந்து நீங்குவதற்கு,
3. அல்லாஹ்வின் நியதிகளை ( கழா கத்ர்) ஏற்றுக் கொள்ளும் போது. இவை லுக்மான் தன் மைந்தனுக்கு கொடுத்த அறிவுறைகளாகும்.

*“என்னருமை மைந்தனே! நீ தொழுகையை நிறைவேற்றுவாயாக. நன்மையை கொண்டும் (பிறரை) ஏவுவாயாக. பாவமான காரியங்ளிலிருந்தும் (மனிதர்களை) விலக்குவாயாக. மேலும், உனக்கேற்படும் கஷ்டங்களை, நீ பொறுமையுடன் சகித்துக் கொள்வாயாக. நிச்சயமாக, இது (அல்லாஹ் கட்டளையிட்ட) காரியங்களில் உறுதியானதில் உள்ளதாகும்.”* சூரா லுக்மான் ௩௧;௧௭.

நன்மையின் பக்கம் மற்றவர்களை ஏவுவதில் தானும் நன்மைகள் செய்வதும், தீமைகளை விட்டும் மற்றவர்களை தடுக்கும் போது தானும் தீமை

செய்வதை விட்டு தன்னை தடுத்துக் கொள்வதும் அடங்கும்.

## அல்லாஹ்வை வணங்குவதில் பொறுமை

அல்லாஹ்வை வணங்குவது என்பது அல்லாஹ்வின் கட்டளைகளை ஒழுங்காக நிறைவேற்றுவதிலும் வணக்கத்துக்குரிய செயல் களை அறிவுடனும் விசுவாசத்துடனும் நிறை வேற்றுவதும் ஆகும். தொடர்ச்சியாக செய்யப் படாத வணக்க வழிபாடுகளி னால் எவ்விதப் பயனுமில்லை. ஆனால் தொடர்ந்து செய்யும் வணக்கங்களிலும் இரண்டு ஆபத்துக்கள் உள்ளன. அல்லாஹ் வின் திருப் பொருத்தத்தையும் அவனது நெருக்கத்தையும் மாத்திரம் நாடி செய்யப்படாத எந்த ஒரு காரியத்தையும் தொடர்ந்து செய்துக் கொண்டிருக்கும் போது மனிதன் அதில் நாட்டம் இழந்து விடக் கூடும். ஆகையால் எமது இபாதா காரியங்களில் இஹ்லாஸுடன் ஈடுபட்டு அவற்றை பாதுகாக்க வேண்டும். அடுத்ததாக, ரஸூல் (ஸல்) அலைஹி வஸல்லம் அவர்களின் சுன்னாஹ்வுக்கு முறனாக ஏற்படாது பாதுகாத்துக் கொள்ள வேண்டும். ஆகையால் எந்த வணக்க வழிபாடும் சுன்னாஹ்வுக்கு ஏற்ப செய்யப்பட வேண்டும்.

## பிழையான செயல்களிலிருந்து விழகியிருப்பதில் பொறுமை

பிழையான செயல்களின் விளைவாக ஏற்படும் அல்லாஹ் வின் தண்டனைக்கு பயப் படுவது அல்லது அல்லாஹ் அளித்த அருட்கொடை களை பாவித்து பாவங்கள் புரிவதைப் பற்றி உள்ளத்தில் அல்லாஹ்வின் முன்னிலையில் எழும் ஹயா எனும் வெட்க உணர்வு ஆகியவைகள் வளர்த்துக் கொள்வதின் மூலம் பொறுமையை வளர்க்க முடியும். அல்லாஹ், அவனுடைய அழகிய திருநாமங்கள், அவனுடைய குனாதிசயங்கள் ஆகியவை பற்றிய அறிவை வளர்ப்பதன் மூலம், ஹயா எனும் இந்த வெட்க உணர்வை மேலும் வளர்க்க முடியும். ஹயா என்பது நற்குணங்கள் கொண்ட உயர்குடி மக்களின் உயர் பண்பாகும். ஆகையால் பயத்தின் காரணமாக பிழையிலிருந்து ஒதுங்கும் மனிதனை விட, ஹயா எனும் வெட்க உணர்வால் பாவங்களை விட்டும் நீங்கும் மனிதன் உயர் அந்தஸ்தை அடைகிறான். மனிதன் அல்லாஹ்வை பற்றியும், அல்லாஹ்வின் சக்தியை பற்றியும் அறிந்து வைத்திருக் கிறான் என்பதை ஹயா எனும் பண்பு சுட்டிக்காட்டுகிறது. அல்லாஹ்வை பற்றிய பயத்தின் காரணமாக பிழை புரியாது விழகி நிற்கும் மனிதன் தண்டனையை பற்றி சிந்திக்கிறான். பயமுள்ள மனிதன் தன்னை

பற்றியும், தண்டனையிலிருந்து தப்புவது எப்படி என்பதில் கவனம் செலுத்துகிறான். ஆனால் ஹயா எனும் பண்பு கொண்ட மனிதன் அல்லாஹ்வையும், அதனுடைய கீர்த்தியை பற்றியும் கவனம் செலுத்துகிறான். இருவருமே ஈமானின் அந்தஸ்தை அடைந்து விட்டனர். ஆனால் ஹயா உள்ள மனிதன், இஹ்ஸான் எனும் ஈமானின் உயர் அந்தஸ்தை பெறுவதன் மூலம் அல்லாஹ்வை கண்ணால் காண்பது போன்ற உணர்வில் செயல் புரிவதால் அவன் உள்ளத்தை ஹயா முழுமையாக நிரப்புகிறது.

ஒருவனின் இமான் குறையவோ அல்லது முழுமையாக நீங்கவோ பிழையான செயல் காரணமாகிறது. ஆகையால் ஒரு விசுவாசி தன் ஈமானை பாதுகாக்க வேண்டுமென்றால் பிழையான செயலை விட்டும் நீங்குவது மிகவும் முக்கியம் என கருதப் படுகிறது.

“விபசாரம் செய்பவன், விபசாரம் புரியும் போது அவன் ஒரு விசுவாசியல்ல. மது அருந்துப வன், மது அருந்தும் போது அவன் ஒரு விசுவாசியல்ல. ஒரு திருடன் திருடும் போது அவன் ஒரு விசுவாசியல்ல. ஒரு விசுவாசி அனுமதிக்கப் பட்ட அனேக செயல்களை விட்டும் ஒதுங்கியிருக்க வேண்டும், ஏனெனில் சில வேலையில் தடுக்கப்

பட்ட செயலுக்கு அவை வழி காட்டக் கூடும்." என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அறிவித்தார்கள்.

## சோதனைகளும் துன்பங்களும் ஏற்படும் சந்தர்ப்பங்களில் பொறுமை

கஷ்டமான சந்தர்ப்பங்களில் பொறுமையை கடைபிடிக்கும் முறைகள்;

1. எதிர்காலத்தில் கிடைக்கக் கூடிய நற் கூலியைப் பற்றி நினைத்தல். எமக்கு கிடைக்கக் கூடிய நற்கூலிகளைப் பற்றி எந்த அளவுக்கு விசுவாசம் கொள்கிறோமோ அந்த அளவுக்கு பொறுமை யை கடைபிடிப்பதற்கு எமக்கு இலேசாக இருக்கும். கிடைக்கக் கூடிய நற்கூலிகள் மீது நம்பிக்கை இல்லாவிட்டால் இவ்வுலக வாழ்வுக் கும் மறுமைக்கும் எவ்வித நோக்கமும் இல்லாது போய் விடும். உடனடியாக கிடைக்கும் இன்பத்தை அனுபவிக்க மனித இயல்பு விரும்பும். ஆனால், அறிவும் முதிர்ச்சியும் நீண்ட கால விளைவுகளை பற்றி எண்ணத் தூண்டும். இதன் அடிப்படை யில், தப்பித்துக் கொள்ளும் வழி இருப்பினும் இல்லாவிடினும், எம்மை எதிர்

நோக்கும் எதனையும் தாங்கிக் கொள்ளும் பொறுமையை வலுப்படுத்திக் கொள்ள முடியும்.

2. சௌகரியத்தை நம்பிக்கையுடன் எதிர் பார்த்தி ருத்தல். இந்த நம்பிக்கை மூலம், உள்ளத்தில் உடனடியாக ஓரளவு நிவாரணம் பெற முடியும்.

3. அல்லாஹ்வின் அளவற்ற அருளைப் பற்றி சிந்தித்தல். அல்லாஹ்வின் அளவற்ற அருளை பற்றி உணரும் போது, இன்றைய பிரச்சினை களை பொறுமையுடன் சமாளிப்பது இலகுவா கிறது. சமுத்திரத்தைப் போன்ற அல்லாஹ்வின் மாபெரும் அருட் கொடைகளுடன் ஒப்பிடும் போது எமது இன்றைய பிரச்சினைகள் வெறும் மழை துளிகள் போல தோன்றும்.

அல்லாஹ் எமக்கு ஏற்கெனவே அளித்த அருட் கொடைகளை மீண்டும் நினைவு படுத்திக் கொள்ளுதல். இது அல்லாஹ் எமது பொழியும் அன்பை நினைவு படுத்தி, வளமான எதிர்காலத்தை பற்றிய நம்பிக்கையை உறுதிப்படுத்தும்.

# ஸப்ர் – பொறுமை

## அஷ்ஷெய்க் இப்னு கய்யிம் அல் ஜவ்Zசிய்யா எழுதிய

“உத்தத் அஸ் ஸாபிரீன் வ தாகிராத்”
“Uddat as Saabireen wa Dhakirat” – Thaha publications
என்ற நூலின் சுருக்கம்.

**உம் பாகம்**

**பொறுமையின் ஐந்து வகைகள்**

ஐந்து வகையான அமல்களின் அடிப்படையில் பொறுமையை ஐந்து வகையாக பிரிக்கலாம். அவையாவன

- வாஜிப் எனும் கட்டாயக் கடமை,
- மந்தூப் எனும் ஊக்கம் கொடுக்கப் பட்ட அமல்கள்,
- மந்தூர் எனும் தடுக்கப் பட்டவை,
- மக்ரூஹ் எனும் வெறுக்கப் பட்டவை,
- முபாஹ் எனும் அனுமதிக்கப் பட்டவை என்பவைகளாகும்.

**வாஜிப் எனும் கட்டாய கடமை**

1. ஹராமான விஷயங்களிலிருந்து விலகி இருப்பதில் பொறுமை.
2. கட்டாய கடமைகளை நிறைவேற்றுவதில் பொறுமை.
3. எம்மால் கட்டுப்படுத்த முடியாத வறுமை, நோய் போன்ற துன்பங்கள் ஏற்படும் போது பொறுமை யுடன் போராடுதல்.

**மந்தூப் எனும் ஊக்கம் கொடுக்கப் பட்ட பொறுமை**

1. மக்ரூஹ் எனும் வெறுக்கப்படும் விஷயங்களை விட்டும் விலகி இருப்பதில் பொறுமை.
2. முஸ்தஹப் எனும் விரும்பத்தக்க, ஊக்குவிக்கப் பட்ட வணக்கங்களை நிறைவேற்றுவதில் பொறுமை.
3. பழி வாங்குவதை விட்டும் நீங்குவதற்கு கடை பிடிக்கும் பொறுமை.

**மந்தூர் எனும் தடுக்கப் பட்ட விஷயங்களில் பொறுமை**

1. மரணம் வரையில் உணவு, பானம் எதுவும் இல்லாமல் பொறுமையுடன் விலகி இருத்தல்.

2. ஹராமான, செத்த பிராணி அல்லது இரத்தம் போன்றவை தவிர வேறு எந்த உணவும் இல்லாத போது, பசிக் கொடுமையின் காரணமாக மரணம் ஏற்படக் கூடும் என்ற நிலையிலும் இவற்றை உண்ணாமல் இருப்பதில் பொறுமை. "செத்த பிராணி, ஹராமான இறைச்சி, இரத்தம் போன்றவை தவிர வேறெந்த உணவும் இல்லாத நிலையில் அவற்றை சாப்பிட மறுத்து அதன் விளைவாக மரணடைபவன் நரகம் செல்வான்," என்று தாவூஸ், அஹ்மத இப்ன் ஹம்பல் ரஹிமஹுமுல்லாஹ் அவர்கள் அறிவிக்கி றார்கள்.

3. பிறருடம் கையேந்தாமல் இருப்பதில் பொறுமை. பிறரிடம் கையேந்துவது அனுமதிக் கப்பட்டதா, அல்லது தடுக்கப் பட்டதா என்ற கேள்வியில் சில கருத்து வேற்றுமை உள்ளன. பிறரிடம் கையேந்தாமல் பொறுமையுடன் இருப்பதற்கு அனுமதி உண்டு என இமாம் ஹம்பல் கூறினார்கள். "பிறருடம் கையேந்தா விட்டால் தான் மரிக்கக் கூடும் என பயப்படும் ஒருவரின் நிலை என்ன?" என்று அவரிடம் வினவப்பட்டது.

“இல்லை. அவர் சாகமாட்டார். அல்லாஹ் அவருக்கு (ரிஸ்க்கை) உணவை அனுப்புவான்.” என்று இமாம் ஹம்பல் பதிலளித்தார்கள். ஒருவனுடைய தேவைகளை யும், பிச்சை எடுப்பதை விட்டு அவன் விலகியிருக்கும் உண்மையான நோக்கத்தையும் அல்லாஹ் அறிவான். அதனால் அல்லாஹ் அவனிக்கு ரிஸ்க்கை அனுப்புவான். இதன் காரணமாக பிச்சை எடுப்பதை இமாம் ஹம்பல் அனுமதிக்க வில்லை. இமாம் ஷாபியும் வேறு சில அறிஞர்களும் வித்தியாசமான கருத்தை கூறினார்கள. “அப்படிப்பட்ட (வறுமை) நிலையில் இருப்பவன் கையேந்துவதற்கு கடமை பட்டுள்ளான். கையேந்துவதின் மூலம் அவன் மரணத்தை விட்டும் தன்னை கப்பாற்றிக் கொள்கிறான். அதனால் (பிறரிடம்) கையேந்தாவிட்டால் அவன் தவறு செய்தவனா கின்றான்.”

4. வன விலங்குகள், பாம்புகள், நெருப்பு, நீர் போன்றவைகளின் மூலம் மரணம் ஏற்படக் கூடிய

ஆபத்தான சந்தர்ப்பங்களில் அவசர மின்றி பொறுமையுடன் செயல் படல்.

5. முஸ்லிம்களுக்கிடையில் பித்னா ஏற்படும் காலங்களில் பொறுமையை கடை பிடித்தல். முஸ்லிம்கள் மத்தியில் கலவரம் ஏற்பட்டு ஒருவரையொருவர் கொலை செய்துக் கொள்ள கூடிய நேரத்தில் பொறுமையுடன் விலகி யிருப்பது முபாஹ் (அனுமதிக்கப் பட்டது) மாத்திரமல்லாது முஸ்தஹப் (விரும்பத் தக்கது) ஆகும். அதனை பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வினவிய போது, “ஆதாமுடை இரு பிள்ளைகளில் நல்ல மகனை போல் இரு.” என்று பதிலளித்தார்கள்.

இன்னொரு ஹதீஸில் “அல்லாஹ்வுடைய அடியார்களில் கொல்லப்பட்டவனை போல் இரு, கொலையாளியாக இருக்காதே.” என்றும் “அவன் (கொலையாளி) அவனுடைய பாபச் செயலுடன் உன்னுடைய பாவச் செயலையும் சுமக்கட்டும்.” என்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். இன்னுமொரு ஹதீஸில் “வாள் அதிக பிரகாசமாக இருந்தால் உன் கையை முகத்தில் போட்டுக் கொள்.” என்று கூறினார்கள்.

ஆதமுடைய இரண்டு மக்களில் நல்லவனுடைய கதையை அல்லாஹ் எமக்கு அறிவித்தான். இவ்விருவரில் ஒரு மகன் திரும்பி சண்டை யிடாமல் சரணடைந்த சம்பவமும், அந்த மகனை அல்லாஹ் பாராட்டியதும் நாம் அறிவோம். ஆனால் முஸ்லிம்கள் காபிர்களுக்கு எதிராக போராடுவது வேறு விஷயமாகும். இப்படியான சந்தர்ப்பத்தில், ஒரு முஸ்லிம் எதிரிகளிடமிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ள போராட வேண்டும். தன்னையும் இஸ்லாத்தையும் பாதுகாக்கும் பொருட்டு எதிர்த்து போராடுவதே ஜிஹாத் என்பது.

**மக்ரூஹ் எனும் வெறுக்கப் பட்ட பொறுமை.**

1. மனிதனின் உடம்புக்கு அவசியமான (உணவு, பானம், உடலுறவு) தேவைகளை விட்டும் தனது உடல் நலத்துக்கு கெடுதல் ஏற்படும் முறையில் அவற்றிலிருந்து விலகி பொறுமையுடன் இருத்தல்.

2. மக்ரூஹ் எனும் வெறுக்கப் பட்ட காரியங்களில் பொறுமையுடன் ஈடுபடுதல்.

**முபாஹ் எனும் அனுமதிக்கப் பட்ட பொறுமை**

முபாஹ் எனும் அனுமதிக்கப் பட்ட காரியங்களை செய்வதை விட்டும் விலகி இருப்பதில் கடை பிடிக்கும் பொறுமை.

## நல்ல பொறுமையும் கெட்ட பொறுமையும்

கெட்ட பொறுமை என்பது ஒருவர் தனது முழுத் திறமையையும் உபயோகித்து தான் படைக்கப் பட்ட நோக்கத்தை அடைந்து, அதன் மூலம் அல்லாஹ்வின் அன்பையும், நாட்டத்தையும் பெறக் கூடிய வழிகள் இருந்தும் அவற்றை விட்டு தூரமாக விலகி இருப்பதில் காட்டும் பொறுமை யாகும். படைத்தவனாகிய அல்லாஹ்வை விட்டால் வேறு வாழ்க்கையில்லை என்று அறிந்திருந்தும், அல்லாஹ்வை விட்டும் வேண்டுமென்றே விலகியிருப்பதில் காட்டும் பொறுமை மிகவும் கடினமான, மிகவும் கீழ்தரமான பொறுமை என்று கருதப் படும். அதற்கு காரணம் இந்த பிடிவாதமான பொறுமையை விட மிகவும் வலுவான வேறு எதுவும் இல்லை. தன்னுடைய நேசர்களுக்காக எந்தக் கண்ணும் கண்டிராத, எந்த காதும் கேட்டிராத, எவரும் கற்பனை செய்திராத மறுமையை அல்லாஹ் தயாரித்திருக்கிறான். ஆனால் அதனை பற்றிய எவ்வித ஆர்வமுமின்றி இருப்பவனை விட அஜாக்கிரதையான வேறு எவனும் இருக்க முடியாது. அனைத்தையும் துறந்து வாழும் ஒரு துறவியை கண்ட

ஒரு மனிதன், “உலக ஆசைகளை விட்டும் நீங்கி வாழும் உங்ளுடைய துறவரத்தை போல் நான் எவரையும் கண்ட தில்லை.” என்று ஆச்சரியப் பட்டான். அதற்கு அந்த துறவி, “நான் குறுகிய கால, அற்பமான இவ்வுலக வாழ்க்கையை தான் துறந்து இருக்கிறேன். ஆனால் நீயோ, என்றும் முடிவுறாத நீண்ட கால மறுமையை துறந்து வாழ்கிறாயே? உன்னுடை துறவரம் தான் என்னை விட மிகவும் வலுவானது” என்று பதிலளித்தான்.

ஷிப்லி (ரஹி) அவர்களிடம் ஒரு மனிதர், “எந்த வகையான பொறுமை மிகவும் கஷ்டமா னது?” என்றி வினவினார். “அல்லாஹ்வின் உதவியை தேடுவதில் பொறுமை” என்று ஷிப்லி (ரஹி) பதில் கூறினார். அந்த மனிதன் “இல்லை” என்று கூற, “அப்படியானால் அல்லாஹவுக்காக கடை பிடிக்கும் பொறுமை.” என்று ஷப்லி (ரஹி) என்று பதிலளித்தார். அதற்கும் “இல்லை” என அந்த மனிதர் கூற “அல்லாஹ்வின் திருப் பொருத்தம் அடையும் பொருட்டு கடை பிடிக்கும் பொறுமை” எனறு ஷிப்லி (ரஹி) கூறினார். அதற்கும் அந்த மனிதன் “இல்லை” என்று கூறினான். “அப்படியா னால் உன் பதில் என்ன?” என்று ஷிப்லி திருப்பிக் கேட்ட போது, “ அல்லாஹ்விடமிருந்து விலகியி ருப்பதில் காட்டும் தீவிரமான பொறுமை.” என்று அந்த மனிதன் கூறிய

பதிலை கேட்ட ஷிப்லி (ரஹி) உயிர் போவதைப் போல் கதறினார்.

நல்ல பொறுமை இரண்டு வகைப் படும். அவையாவன, 'அல்லாஹ்வின் பொருட்டு பொறுமையுடன் இருப்பதும், அல்லாஹ்வின் உதவியுடன் பொறுமையுடன் இருப்பதுமாகும்.

*"மேலும், உமதிரட்சகனின் தீர்ப்பை (எதிர் பார்த்து) பொறுத்திருப்பீராக. நிச்சயமாக நீர் நம் கண்களுக்கு முன்பாகவே இருக்கின்றீர்."* ௫௨/௪௮.

அல்லாஹ்வின் உதவியுடன் கிடைக்கும் பொறுமையில்லா விட்டால், அல்லாஹ்வின் பொருட்டு பொறுமையுடன் இருக்க முடியாது.

*"மேலும், (நபியே!) நீர் பொறுமையுடன் இருப்பீராக. மேலும், உம்முடைய பொறுமை அல்லாஹ்வை கொண்டே தவிர இல்லை."* ௧௬/௧௨௭.

அல்லாஹ்வுடைய உதவியின்றி பொறுமை யை அடைய முடியாது. இதற்காக அல்லாஹ் வுடைய உதவியுடன் அல்லாஹ்வின் துணையும் எமக்கு தேவை என்பதை பின் வரும் ஹதீஸ் அல் குத்ஸி விளக்குகிறது.

"அவன் எதைக் கொண்டு செவிமடுக்கி றானோ அந்த செவியாக நானாவேன், அவன் எதைக் கொண்டு பார்க்கிரானோ அந்த பார்வை

நானாவேன், எந்த கையால் அவன் அடிக்கி றானோ, அந்த கையாக நானாவேன்.”

ஈமான் கொண்டவன் மீதும், பிழை புரிபவன் மீதும், அல்லாஹ்வின் உதவி கிடைப்பதுடன், அவர்கள் இருவருக்கும் அல்லாஹ்வின் பரக்கத்தும், ரிஸ்க்கும் கொடுக்கப் படுகின்றது. இந்நத ஹதீஸ் மேலும் பல விஷயங்களை விவரிக்கிறது. ஒரு மூமின் அதிகமான நப்ல் வணக்கங்களில் ஈடுபடும் போது, அவன் அல்லாஹறவின் நெறுங்கிய அன்பையும் துணையையும் பெறுகிறான். இந்த அந்தஸ்தை ஒரு மூமின் அடையும்போது, அவன் செவிகொடுப்பது அல்லாஹ்வின் செவியாக இருக்கும். அவன் பார்ப்பது அல்லாஹ்வின் பார்வையாக இருக்கும். அல்லாஹ் அவனுடன் இல்லாது எதனையும் அவன் செய்ய மாட்டான். எவர் இந்த நிலையை அடைகிறாரோ, அவர் அல்லாஹ்வின் பொருட்டும் அல்லாஹ்வின் சந்தோஷத்தையும் நாடி, எந்த கடுமையான துன்பத்தையும் தாங்கிக் கொள்வார். இந்த நிலையை அடையாதவர் இந்த பொறுமை யின் அந்தஸ்தை அடைய மாட்டார். இவர் எந்த அளவுக்கு அல்லாஹ்வின் நற்பை அடைகிறாரோ, அந்த அளவுக்கு அவருடைய பொறுமையின் தரம் இருக்கும். அல்லாஹ்வின் நற்பை சம்பாதித்த ஒரு மூமின், மற்றவர்கள் அடைய முடியாத அளவுக்கு பொறுமையின் சிகரத்தை அடைவார். இத்தகைய

பொறுமையை பெற்றவர்கள் இவ்வுலகிலும், மறுமையிலும் வெற்றி பெற்றவர்களாகின்றனர். இவர்களை பற்றி அல்லாஹ இவ்வாறு விளக்கினான்.

*“விசுவாசங்கொண்டோரே! பொறுமை மற்றும் தொழுகையை கொண்டு உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்.”* உ/கருஉ.

**அல்லாஹ்வின் அழகிய பண்புகளை கடைபிடித்தல்**

ஒருவன் அல்லாஹ்வின் அழகிய பண்புகள் மீது நேசம் வைப்பதன் மூலம் அல்லாஹ்வை நெருங்க முடியும். எல்லாம் வல்ல அல்லாஹ் அஸ் ஸபூர் - அதிக பொறுமையாளன். அவனை விட மிகப் பொறுமையாளன் எவரும் இல்லை. தாவூத் (அலை) க்கு “என்னுடைய அழகிய பண்புகளை பயின்றுக் கொள். ஏனெனில் நான் அஸ் ஸபூர், மிகப் பொறுமையாளன்.“ என்று அல்லாஹ் வஹி மூலம் அறிவித்தான். அல்லாஹ் அவனுடைய அழகிய பண்புகளையும், குணாதிசயங்களையும் விரும்புபவன். தன்னுடைய அழகிய பண்புகளின் விளைவுகளை அவனுடைய அடியார்களில் காண்பதற்கு விருப்பமுள்ளவன். அல்லாஹ் அழகானவன், அதனால் அழகை விரும்புகிறான். அல்லாஹ் அதிகம் மன்னிப்பவன், அதனால் மன்னிப்பை விரும்புகிறான். அல்லாஹ் பரம

தயாளன், அதனால் தயாள தன்மையை விரும்புகின்றான். அவன் சகலமும் அறிந்தவன், அதனால் அறிவுள்ள மக்களை விரும்புகின்றான். அல்லாஹ் பெரும் சக்தி வாய்ந்தவன், அதனால் பலகீனமான விசுவாசியை விட சக்தி வாய்ந்த மூமினை விரும்பு கின்றான். அல்லாஹ் அஸ் ஸபூர் மிகப் பொறுமையாளன், அதனால் பொறுமை யாளர்களை நேசிக்கிறான். அல்லாஹ் அஷ் ஷகூர் நன்றியுள்ளவன், அதனால் தனக்கு நன்றி செலுத்துப வர்களை நேசிக்கிறான். ஆகையால் தனது அழகிய பண்புகளை பயிலும் மக்களை நேசிக்கிறான். அதனால் அல்லாஹ் அவர்களுடன் இருக்கின்றான். இது தான் அல்லாஹ்வுக்கும், அடியானுக்கும் இடையிலுள்ள நெருக்கமான விஷேட சினேகமாகும். இதனால் பொறுமையை கடைபிடிப்பது, அல்லாஹ்விடம் முறையிடுவது ஆகிய இவ்விரண்டுக்கும் இடையில் எவ்வித முரண்பாடும் கிடையாது.

அழுகையும், அல்லாஹ்விடம் முறையிடுத லும் அந்த மனிதருக்கு பொறுமையில்லை என்று கருதப்படாது. யாகூப் (அலை) அவர்கள் “அழகான பொறுமையை கைக்கொள்வதே மிக்க நன்று.” என்று (ஸப்ருன் ஜமீல்) அல் குர்ஆன் சூரா யூஸுப் கஉ;அங கூறினார். ஆனால் தன் மகன் யூஸுப் மீது கொண்ட அன்பும், அவரை இழந்த சோகமும் காரணமாக,

“யூஸுபை பற்றிய என் துக்கமே!” என்று கூறினார். சூரா யூஸுப் கஉ;அச இங்கு ஸப்ருன் ஜமீல் என்பது மக்களிடம் முறையிடாது இருப்பதை குறிக்கிறது. அல்லாஹ்விடம் முறையிடுவது எமது பொறுமையை சிதைத்து விடாது. யாகூப் (அலை) அவர்கள் “என்னுடைய துக்கத்தையும் கவலையையும் நான் முறையிடு வதெல்லாம் அல்லாஹ்விடமே தான்.” சூரா யூஸுப் கஉ;அகூ என்று கூறியதை கவனிக்கவும்.

முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் ஸப்ருன் ஜமீல் எனும் பொறுமையை சுமத்தினான். அதன் படி நபி அவர்கள், அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்றுக் கொண்டு, “யா அல்லாஹ் பலஹீனத்தையும், உதவியற்ற நிலையையும் உன்னிடமே முறையிடுகிறேன்.” என்று பிரார்த்தனை புரிந்தார்கள்.

## பொறுமையின்றி மனிதனால் எதுவும் முடியாது

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மனிதன், அல்லாஹ் வின் கட்டளையை நிறைவேற்றவோ, அல்லது அல்லாஹ் தடுத்தவற்றை விட்டு விழகி இருக்கவோ அல்லது அல்லாஹ்வின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளவோ, அல்லது அல்லாஹ்விடமிருந்து பெற்ற அருட் கொடைக்கு நன்றி கூறவோ தேவையான நிலையில் மனிதன் வாழ்கிறான். இந்த எல்லா சந்தர்ப்பங்களிலும் மனிதனுக்கு பொறுமை

தேவைப்படுவதால் தனது இறுதி மூச்சு வரை பொறுமயை கடைபிடிக்காது ஒருவராலும் வாழ முடியாது. நாங்கள் விரும்பியோ, விரும்பாமலோ எங்கள் வாழ்வில் சம்பவங்கள் நிகழ்கின்றன. இந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பொறுமை தேவைப்படுகிறது.

ஆரோக்கியம், பாதுகாப்பு, பலம், செல்வம், ஆசைகள் பூர்த்தி அடைதல் போன்றவைகள் ஒரு மனிதனுக்கு கிடைத்தால் அவை என்றென்றும் நிலைத்து நிற்கும் என்று அவன் கருதக் கூடாது. இந்த செல்வத்தின் காரணமாக அகம்பாவம், வீண் விரயம், கவலையின்மை போன்ற அல்லாஹ் விரும்பாத செயல்களில் ஈடுபடக் கூடாது. தனது செல்வத்தையும், சக்தியையும் உலக இன்பத்துக் காக செலவு செய்யக் கூடாது. ஏனெனில்அளவுக்கு மீறிய இன்பம் இறுதியில் துயரத்தில் முடியும். அல்லாஹ்வுக்காக செலவிட வேண்டிய சகாத், ஸதகா போன்றவைகளை செலுத்த வேண்டும், இல்லாவிட்டால் அல்லாஹ் தனது பரக்கத்தை நிறுத்தி விடுவான். ஹராமான வழியில் பணத்தை செலவு செய்யாது, அல்லாஹ் வெறுக்கும் மக்ரூஹான வழியிலும் செலவு செய்வதை தடுத்துக் கொள்ள வேண்டும். இவற்றுக்கு பொறுமை தேவைப் படுகிறது. ஆகையால் அஸ் ஸித்தீக்கூன் எனும்

உறுதியான ஈமான் கொண்டவர்களைத் தவிர மற்றவர்களால் இதனை சாதிக்க முடியாது.

வளமான நிலையில் பொறுமையுடன் இருப்பதை, விட கஷ்டமான நிலையில் பொறுமயுடன் வாழ்வது இலேசாகும்.

“ஈமான் கொண்டவர்களும், ஈமான் கொள்ளாதவர்களும், சோதனைகள் நிறைந்த காலத்தில் பொறுமையுடன் வாழக் கூடும். ஆனால் வளமான வாழ்க்கையிலும் பொறுமையிடன் வாழ்வதற்கு உறுதியான ஈமான் கொண்டவர்களால் மாத்திரமே முடியும்.” என்று ஒரு ஸலபி கூறினார்.

செல்வம், மனைவியர், பிள்ளைகள் பற்றி அல்லாஹ் குர்ஆனில் எச்சரிக்கை செய்ததும் இதனைப் பற்றியே.

“விசுவாசம் கொண்டோரே! உங்களுடைய செல்வங்களும், உங்களுடைய மக்களும் அல்லாஹ்வுடைய நினைவிலிருந்து உங்களை (திருப்பி) வீணாக்கி விட வேண்டாம். இன்னும், எவர் அதை செய்கிறாரோ அவர்கள் தாம் நஷ்டமடைந்த வர்கள்.” சூரா அல் முனாபிகூன் கூஇ;கூ

“விசுவாசம் கொண்டோரே! நிச்சயமாக உங்கள் மனைவியரிலும், உங்கள் பிள்ளைகளிலும் உங்களுக்கு விரோதிகள் இருக்கின்றனர். ஆகவே

அவர்களைப் பற்றி எச்சரிக்கையாக இருந்துக் கொள்ளுங்கள்.” சூறா அத் தகாபுன் கூச;கச

இந்த குர்ஆன் ஆயத் குறிப்படும் விரோதத்துக்கு வெறுப்பும், சச்சரவும் காரணமில்லை. மாறாக ஹிஜ்ரா, ஜிஹாத், அறிவைத் தேடி பயணம் செய்தல், சதகா கொடுத்தல் போன்ற மார்க்கம் கூறும் கடமைகளை நிறைவேற்ற வழி விடாத பாசமும், பற்றுதலும் தான் காரணமாகின்றனர்.

மேற் குறிப்பிட்ட குர்ஆன் வசனத்தைப் பற்றி இப்னு அப்பாஸ் (ரலி) அன்ஹுமவிடம் ஒரு மனிதன் கேள்வி கேட்டபோது, அவர் இவ்வாறு விளக்கம் கூறினார்கள். “மக்காவாசிகள் சிலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் நபி (ஸல்) அவர்களுடன் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்ய விரும்பிய போது அவர்களுடைய மனைவியரும், பிள்ளைகளும் அவ்வாறு செல்ல விடாது தடுத்தார்கள். இறுதியில் அவர்களும் மதீனாவுக்கு சென்று முஸ்லிம் சமூகத்தில் சேர்ந்துக் கொண்ட போது, ஏற்கெனவே அங்கு குடிபெயர்ந்த முஸ்லிம்கள், இஸ்லாமிய அறிவில் தம்மை விட மிகவும் உயர்ந்தவர்களாக இருப்பதைக் கண்டு, தம்முடைய அறியாமைக்கு காரணமாக அமைந்த மனைவி மக்களை தண்டிக்க முனைந்தார்கள். ஆகையால் “விசுவாசம் கொண்டோரே! நிச்சயமாக உங்கள் மனைவியரிலும்,

உங்கள் பிள்ளைகளிலும் உங்களுக்கு விரோதிகள் இருக்கின்றனர். ஆகவே அவர்களைப் பற்றி எச்சரிக்கையாக இருந்துக் கொள்ளுங்கள்." என்ற சூறா அத் தகாபுன் கூச";கச ஆயத்தை அல்லாஹ் இறக்கினான். இது ஹஸன் ஹதீஸ் என திர்மிதி அறிவிக்கிறார்.

"உங்களடைய கோழைத்தனத்துக்கும், கஞ்சத் தனத்துக்கும் உங்கள் பிள்ளைகளே காரணம்." என்ற ஹதீஸ் ஒரு மனிதன் இஸ்லாத்தில் பூரணத் துவத்தையும், வெற்றியையும் அடைவதை அவனு டைய மனைவியரும் பிள்ளைகளும் தடுக்கிறார்கள் என்று சுட்டிக் காட்டுகிறது. ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் குத்பா பிரசங்கம் நடத்திக் கொண்டிருக் கையில், குழந்தைகளான ஹஸன், ஹுஸைன் இருவரும் தத்தித் தடுமாறி நடப்பதைக் கண்டு, குத்பாவை இடையில் நிறுத்தி குழந்தைகளை வாரி அணைத்துக் கொண்டார்கள். பின்பு, 'விசுவாசம் கொண்டோரே! நிச்சயமாக உங்கள் மனைவியரி லும், உங்கள் பிள்ளைகளிலும் உங்களுக்கு விரோதிகள் இருக்கின்றனர்.' என்று அல்லாஹ் உண்மையே கூறினான். இவ்விரு குழந்தைகள் தத்தித் தடுமாறி நடப்பதைக் கண்டு குத் பாவை தொடர்ந்து நடத்த எனக்கு பொறுமையிருக்க வில்லை. அதனால் குத்பாவை நிறுத்தி அவ்விரு வரையும் வாரி அணைத்துக் கொண்டேன்." என்று கூறினார்கள். நபி

(ஸல்) அவர்கள் குழந்தைகள் மீது கொண்ட அளவற்ற அன்பின் காரணமாகவும், குழந்தைகள் மீது இரக்கம் காட்டும் படி மக்களுக்கு எடுத்துக் காட்டும் நோக்கத்தின் காரணமாகவும் இதனை செய்தார்கள்.

வசதியுள்ள ஒருவருக்கு, தான் எவ்வாறு நடந்துக் கொள்வது என்பதை தீர்மானம் செய்யும் சுதந்திர முள்ள காரணத்தால் அவர் கட்டுப்பாட்டுக்குள் பொறுமையுடன் வாழ்வது மிகவும் கஷ்டம். உணவு இல்லாது பொறுமையுடன் பசியில் வாடும் ஒருவ ருக்கு உணவு கிடைத்தால் அவரது பொறுமை பலகீனமடையும். அதே போன்று, பெண்கள் அருகில் இல்லாத போது, ஒருவரது காமாசையை கட்டுப் படுத்தும் காரியம் இலேசாக தோன்றும்.

**வணக்க வழிபாட்டில் பொறுமை**

மானிடர்களாகிய நாம் இயற்கையான சோம்பல் காரணமாக வணக்க வழிபாடுகளை செய்வதை வெறுக்கிறோம். ஈவிரக்கமற்ற உள்ளம் கொண்ட வன், உலக இன்பங்கள் பற்றி அதிகமாக நினைப் பதும் அல்லாஹ்வின் சிந்னையற்ற மக்களுடன் நெருங்கிப் பழகுவதும் காரணமாக அதிகமான பாவங்கள் செய்வதால் வணக்க வழிபாடுகள் பற்றி சிந்திப்பதில்லை. அத்துடன் தொழுகையில் ஈடுபட் டாலும், மனதில் வேறு சிந்தனையுடன், அவசர அவசரமாக தொழுது முடித்து விடுவான்.

வணக்க வழிபாட்டில் ஈடுபடும் போது ஒவ்வொரு கட்டத்திலும் பொறுமை தேவைபடு கிறது. வணக்க வழிபாட்டை ஆரம்பிக்கு முன் தனது நிய்யத் சரியாக அமைந்ததா என்று உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும். மற்றவர் கண்களுக்கு அழகாக காட்ட வேண்டும் என்ற நோக்கமின்றி தூய்மையான உள்ளத்தோடு செய்ய வேண்டும். தொழுகையில் இருக்கும் போது பரிசுத்தமான நிய்யத்தோடு, அல்லாஹ்வின் திருப்தியை பெறும் ஒரே நோக்கத்துடன், தனது ஒவ்வொரு அசைவை யும் சம்பூர்ணப் படுத்த வேண்டும். தொழுகையை முடித்த பின், தனது தொழுஹையை நாசப்படுத்தக் கூடிய எந்த செயலிலும் ஈடு படாது கவணமாக இருக்க வேண்டும். “விசுவாசம் கொண்டோரே! ....நீங்கள் உங்களுடைய தர்மங்களை சொல்லிக் காண்பித்தும், நோவினை செய்தும் வீணாக்கி விடாதீர்கள்.” என்று அல்லாஹ் குர்ஆன் உ;உகூச வசனத்தில் கூறுகிறான். ஒவ்வொருவரும் தன் செய்கைகளை பற்றி பெருமை கொள்ளாது பொறுமையுடன் இருக்க வேண்டும். மனித உள்ளத்தில் எழும் பெருமை, பகிரங்கமாக செய்யும் பிழையான காரியங்களை விட அவனுக்கு அதிக பாதகத்தை விளைவிக்கக் கூடும். அதே சமயத்தில் தனது வணக்க வழிபாடுகள் பற்றி ஆரவாரம் செய்யாது, அதனைப் பற்றி பிறருக்குச்

சொல்லிக் காண்பிக்காது நடந்துக் கொள்ள வேண்டும்.

## பாவம் செய்வதிலிருந்து விழகுவதில் பொறுமை

பாவமான காரியங்களிலிருந்து விழகுவதற்கு சிறந்த வழி, தீய பழக்கங்களை உடனடியாக நிறுத்துவதும், தீய செயலுக்கு உடந்தையாக இருக்கும் நண்பர்களை விட்டும் நீங்குதலும் தான். மனிதனின் நடத்தைக்கு முக்கிய காரணம் பழக்க வழக்கங்களே. இதனுடன இச்சையும் சேர்ந்துக் கொண்டால், ஷைத்தானின் இரண்டு சிப்பாய்கள் மனிதுடன் இணைந்துக் கொள்கிறார்கள். இவர்களுக்கு எதிராக புரியும் போரில் மதமும், மனச் சாட்சியும் வலுவிழந்து போகின்றன.

## கஷ்ட நிலையிலும், மனிதனின் கட்டுப்பாட்டை மீறிய சந்தர்ப்பங்களிலும் தேவைப்படும் பொறுமை

நெருங்கிய ஒருவரின் மரணம், நோய், செல்வத்தில் நஷ்டம் என்பவை இரு வகையானவை. அவனது கட்டுப்பாட்டை மீறி ஏற்படும் நஷ்டமும், பிறரால் ஏற்படும் அவதூறுகள், தாக்குதல் போன்ற நஷ்டங்களும் இதில் அடங்கும்.

தன்னை மீறி நடக்கும் பிரச்சினைகளை சந்திக்கும் மனிதர்கள் பின் வரும் ஒரு முறையில் செயல் புரிவார்கள்.

1. கையாலாகாத, திருப்தியற்ற நிலை, பதற்றமடை தல், முறையிடுதல்.
2. அல்லாஹ்வுக்காக அல்லது துணிச்சலுடன் பொறுமையாக பிரச்சினையை எதிர் நோக்கல்.
3. ஏற்பட்டுள்ள நிலைமையை மன உறுதிடன் ஏற்றுக் கொள்ளுதல். இது பொறுமையின் உயர்ந்த கட்டமாகும்.
4. ஏற்பட்டுள்ள நிலைமையை நன்றியுடன் ஏற்றுக் கொள்ளுதல். ஒருவர் தனக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைக்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதால் இது மிகவும் உன்னதமான கட்டமாகும்.

மற்ற மனிதர்களால் ஏற்படும் நஷ்டங்களையும், பிரச்சினைகளையும் எதிர்நோக்கும் போது இவ்வாறு நடந்துக் கொள்ளலாம்.

1. அவர்களை மன்னித்து, அனைத்தையும் மறந்து விடலாம்.
2. அவர்களிடம் பலி வாங்காது விட்டு விடலாம்.
3. தனக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியவர் ஒரு அனியாயக்காரர் என அறிந்தாலும், இது அல்லாஹ்வின் ஒரு ஏற்பாடு என்று ஏற்றுக்

கொள்வது. வெப்பம், குளிர் போன்ற கால நிலையை பற்றி முறையிடுவது அறிவீனம். அது போல் மனிதர்களால் சில சமயங்களில் ஏற்படக் கூடிய தீங்குகைளையும் தடுக்க முடியாது என்றும், பல்வேறு உருவத்தில் தீங்குகள் நடை பெற்றாலும் இவை அனைத்தும் அல்லாஹ்வின் ஏற்பாட்டினால் நடைபெறுகிறது என்று அறிந்துக் கொள்ளுதல்.

4. தனக்கு தீமை புரிந்தவனுக்கு நன்மைசெய்தல். இதன் மூலம் ஏற்படக் கூடிய எராளமான நன்மைகளை அல்லாஹ் மாத்திரமே அறிவான்.

மனிதன் தானாக ஒரு நிலைமையை ஏற்படுத்தி, அதன் விளைவுகள் அவனையும் மீறி நடைபெறும் போது இருக்க வேண்டிய பொறுமை. உதாரணமாக காதல் என்பது ஒருவன் தானாக விரும்பி தொடங்கினாலும், அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை அவனால் கட்டுப் படுத்த முடியாது போகக் கூடும். ஒருவர் பல் வேறு நோய்களுக்கும், வேதனைக்கும் தன்னை ஆளாக்கிக் கொள்ளுதல். உதாரணமாக, புகைத்தல், குடி, போதை வஸ்துக் கள் பாவனை மூலம், தனது உடல் நலம் பாதிக்க செயல் புரிதல். அளவுக்கு மீறிய குடி, போதை பொருட்களை உபயோகித்தால் இறுதியில் அதன் பாவனையை

நிறுத்த முடியாது போகும். இப்படிப் பட்ட நிலையை தவிர்த்துக் கொள்ள, மனிதன் தன்னை பொறுமையுடன் கட்டுப் படுத்திக்கொள்ள வேண்டும்.

## ஒருவரை இழந்த சோகமான நிலையில் பொறுமை

தான் நேசித்த ஒருவரை இழக்கும் போது எந்த மனிதரும் பெரும் துயரத்துக்கு ஆளாவது இயற்கையே. இப்படிப்பட்ட சமயங்களில் மக்கள் வித்தியாசமான முறையில் நடந்துக் கொள்வார்கள். ஆனால் இவை அனைத்தும் அவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தின் தன்மையை காட்டும். ஒப்பாரியிடுதல். மரித்தவரை பற்றி அளவு மீறி புகழ்தல், ஆடைகளை கிழித்துக் கொள்ளுதல் என்பவை ஜாஹிலிய்யா எனும் அறியாமை காலத்தின் சான்றுகளாகும். ஆனால் இன்றும் இஸ்லாமிய சமூகங்களில் அவற்றை காண முடிகிறது. ஒரு முஸ்லிமுக்கு இவ்வாறு நடந்துக் கொள்ள அனுமதி இல்லை. வாழ்வில் ஏற்படும் எந்த துன்பதையும் ஒரு மூமின் பொறுமையுடன் தாங்கிக் கொள்ள வேண்டியது போல் தனது நெறுங்கிய ஒருவரை இழந்த துயரத்தையும் பொறுமையுடன் தாங்கிக் கொள்ள வேண்டும்.

தனது நெருங்கிய ஒருவரது மரணத்துக்கு முன்பும், மரணத்தின் போதும், மரணத்தின் பின்பும் கண்ணீர் விடவும், துயரப்படவும் ஒருவருக்கு அனுமதி உண்டு.

ஒருவரது உயிர் பிரியுமுன் கண்ணீர் சிந்த அனுமதி இருப்பினும், ஒருவர் மரணமடைந்த பின் அழுவது மக்ரூஹுஃ என்று இமாம் ஷாபி கூறுகிறார்கள்.

ஆனால் மரணத்துக்கு முன்பும், மரணத்துக்கு பின்பும் அழுவதற்கு அனுமதியுண்டு என்பதே சரியான கருத்தாகும். ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் (ரலி) பின் வருமாறு அறிவிக்கிறார்கள். "எனது தந்தை உஹுஃத் போரில் மரணமடைந்த போது நான் துயரத்தில் அழுதேன். அதனை நிறுத்துமாறு சிலர் எனக்கு கூறிய போதும், நபி (ஸல்) அவர்கள் என் அழுகையை நிறுத்துமாறு கூற வில்லை. எனது அத்தை பாத்துமா (ரலி) அவர்களும் கண்ணீர் விட ஆரம்பித்த போது நபி (ஸல்) அவர்கள், "நீங்கள் அழுதாலும் அழா விட்டாலும் பரவாயில்லை. மலக்குகள் அவருடைய உயிரை எடுத்துக் கொண்டு வானத்தில் ஏறும் வரை, அவருக்கு நிழல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்." என்று அறிவித்தார்கள்.

ரசூல் (ஸல்) அவர்களது மகள் ருகைய்யா (ரலி) அன்ஹா அவர்கள் மரணித்த போது,பெண்கள் அழ ஆரம்பித்தார்கள். அவர்களுடைய அழுகையை நிறுத்தும் படி உமர் (ரலி) அன்ஹுஃ பிரம்பால் அடிக்கத் தொடங்கிய போது, நபி (ஸல்) அவர்கள், "யா உமர்! அவர்களை அழுவதற்கு விடுங்கள்." என்று கூறி, பெண்களை நோக்கி, "நீங்கள் அழ முடியும்.

ஆனால், ஷெய்தானுடைய அழுகையை விட்டும் தவிர்ந்துக் கொள்ளுங்கள். கண்களிலும் உள்ளத்திலும் இருந்து வருவது அல்லாஹ்விட மிருந்து வருவதால் அது கருணையாகும். ஆனால் கைகளாலும் நாவாலும் வரும் செயல் ஷெய்தானிட மிருந்து வருகிறது." என்று கூறினார்கள். (அறிவிப்பவர் அஹ்மத்)

நபி (ஸல்) அவர்கள் தனக்கு நெருக்கமான யாரேனும் இறந்த பல சந்தர்ப்பங்களில் துயரத்தில் கண்ணீர் வடித்ததாக நிறைய ஹதீஸ்கள் உள்ளன. நபி (ஸல்) அவர்கள் தனது தாயாரின் கப்ரை தரிசித்த போது கண்ணீர் வடித்ததை கண்ட ஏனையவர்கள் கண்ணீர் சிந்தினார்கள். உஹுத் போரில் ஷஹீதான உத்மான் இப்ன் மதூன் (ரலி) அவர்களை நபி (ஸல்) அடக்கம் செய்த போது, அன்னாரது கண்களிலிருந்து வடிந்த கண்ணீர் உத்மா (ரலி) அன்ஹுவின் முகத்தில் விழுந்தது. ரோம ராஜ்யத்துக்கு எதிராக மூத்தா என்ற இடத்தில் நடைபெற்ற யுத்தத்தில் ஜாபர் (ரலி) அன்ஹுவும் தோழர்களும் ஷஹீதான செய்திகளை, கண்களிலிருந்து கண்ணீர் கொட்டியவாறு நபி (ஸல்) அவர்கள் அறிவித்தார்கள்.

இன்னுமொரு ஸஹீஹான ஹதீசில், நபி (ஸல்) அவர்கள் மரணித்த போது, அபு பக்கர் (ரலி) அன்ஹு கண்ணீர் சிந்தியவாறு அன்னாரை முத்த மிட்டார்கள்.

ஆகையால், துக்கம் நிறைந்த சந்தர்ப்பத்தில் அழக்கூடாது என தடுக்கும் ஹதீஸ், ஒப்பாரி வைப்பது, இறந்தவரின் புகழ் பாடுவது, ஆடைகளை, தலை முடியை கலைத்துக் கொள்வது போன்ற செயல்களை தடுக்கிறது என்பதை நாம் புரிந்துக் கொள்ள வேண்டும்.

# ஸப்ர் – பொறுமை

## அஷ்ஷெயிக் இப்னு கய்யிம் அல் ஜவ்Zசிய்யா எழுதிய

“உத்தத் அஸ் ஸாபிரீன் வ தாகிராத்”
என்ற நூலின் சுருக்கம்.

நம் பாகம் தொடர்கிறது

**இறந்தவரின் புகழ் பாடுவதும் ஒப்பாரியிடுவதும்**

இமாம் ஷாபி, மற்றும் ஏனைய மார்க்க அறிஞர்களின் கருத்துப் படி மரித்தவரின் புகழ் பாடுவதும், ஒப்பாரியிட்டு கதறி அழுவதும் ஹராமான செயல்களாகும். அப்துல்லாஹ் இப்ன் மஸூத் (ரலி) அவர்கள் ரஸூல் (ஸல்) அவர்கள் அறிவித்த பின் வரும் ஹதீஸை அஹ்மத் அறிவிக்கிறார்கள்.

“தன் கன்னங்களில் அடித்துக் கொண்டும், ஆடைகளை கிழித்துக் கொண்டும் ஜாஹிலிய்யா கால மக்களைப் போல் நடந்துக் கொள்ளும் மனிதன் எம்மை சார்ந்தவன் அல்ல.” ஆதாரம் இமாம் அல் புஹாரி, முஸ்லிம்.

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபு மாலிக் அல் அஷ்அரி பின் வருமாறு அறிவிக்கிறார்கள்.

“ஜாஹிலிய்யாக் காலத்தின் நான்கு பழக்கங்கள் எனது மக்கள் மத்தியில் இன்றும் உள்ளன. எனது சமூகம் அதனை விட்டும் என்றும் நீங்காது. அவையாவன, உயர் பரம்பரை பிறப்பில் பெறுமை தேடுவது, மற்றவர்களின் பரம்பரையில் குறைகள் தேடி அவர்களை கேவலப்படுத்துவது, சோதிடம் பார்ப்பதன் மூலம் மழை நாடுவது, ஒப்பாரியிட்டு கதறி அழுவது ஆகியவையாகும்.

“ஒப்பாரியிட்டு கதறும் பழக்கத்தை செய்யும் ஒரு பெண், தனது மரணத்துக்கு முன் அதற்காக பாவ மன்னிப்பு தேடா விட்டால், மறுமை நாளில் தார் ஆடைகள் அணிந்தவளாக, உடம்பெங்கும் சிறங்குடன் எழுப்பப் படுவாள்.” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதாரம் முஸ்லிம்.

நபி (ஸல்) கூறியதாக அபு மூஸா (ரலி) பின் வருமாறு அறிவிக்கிறார்கள்.

“உயிருடன் இருப்பவர்களின் ஒப்பாரியின் காரணமாக மரித்தவர் கஷ்டத்துக்கு ஆளாகிறார். ‘எவ்வளவு பெரிய நஷ்டம். எனக்கு ஆடை அணிவித்த எனது வலது கரத்தை இழந்து விட்டனே!.’ என ஒரு பெண் கதறி அழும்போது, ‘அவளது வலது கை நீ தானா? அவளுக்கு ஆதரவளித்தது நீ தானா? அவளுக்கு ஆடை அணிவித்தது நீ தானா?’ என்று

மரித்தவரிடம் கடுமையாக கேள்வி கேட்கப்படும்." ஆதாரம் அஹமத்.

மரித்தவரின் புகழ் பாடுவது, கதறி அழுவது போன்ற செயல் கள் ஹராம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இறைவனைப் பற்றி அதிருப்தி தெரிவிக்கும் போது, பொறுமையின்றி நடந்துக் கொள்ளும் போது ஹராம் அன்றி வேறு எவ்வாறு இருக்க முடியும்? தனது முகத்தில் அடித்துக் கொள்ளும்போது, தலை முடியை இழுத்துக் கொள்ளும் போது, தன் உயிரை பறித்துக் கொள்ளுமாறு அல்லாஹ்விடம் கதறும் போது, ஆடைகளை கிழித்து தனது பொருட்களை நாசமாக்கிக் கொள்ளும் போது, அல்லாஹ் அநீதி செய்து விட்டதாக குற்றம் சாட்டும் போது, மரித்தவரிடம் இல்லாத நற் குணங்களை கற்பனை செய்து புகழ் பாடும்போது, தனக்குத் தானே ஒருவர் கெடுதல் செய்துக் கொள்கிறார். இந்த பட்டியலில் இருக்கும் எந்த செயலும், மரித்தவருக்காக கதறி அழுவது தடுக்கப் படவேண்டும் என்பதற்கு போதிய காரணமாக அமையும்.

## ஒரு சில வார்த்தைகளை கூறுவது

மறித்தவருக்காக கண்ணீர் சிந்தும் போது, அவரைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறுவதற்கு அனுமதி உண்டு. ஆனால் அவை உண்மையான

வார்த்தைகளாக இருக்க வேண்டும். இவற்றை கூறும் போது கதறி அழவோ, அல்லாஹ்வின் கட்டளையில் குறை காணும் முறையில் பேசவோ அனுமதியில்லை. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஒரு சில வார்த்தைகள் குறிப்பிடும் போது, அவை பொறுமைக்கு மாற்றமாகவோ ஹராமாகவோ கருதப்படாது. நபி (ஸல்) அவர்கள் வபாத்தான போது, அபு பக்கர் (ரழி) அன்ஹு அங்கு பிரவேசித்து, நபியவர்களின் நெற்றியில் இரு கண்களுக் கிடையில் முத்தமிட்டு, "எனது நபியே! எனது இனிய நண்பரே! எனது அன்புக்குரியவரே!' என்று கூறினார்கள்." என அனஸ் (ரழி) அறிவித்தார்கள்.

அனஸ் (ரழி) பின் வரும் சம்பவத்தை அறிவித்தார்கள். நபி (ஸல்) அவர்கள் அதிக சுகயீனம் காரணமாக, அடிக்கடி மயக்கம் அடைந்தார்கள். அந் நிலையை கண்ட பாத்திமா (ரழி) அன்ஹா "என் தந்தைக்கு எவ்வளவு பெரிய துன்பம் ஏற்படுகிறது" என்று மனம் வருந்தினார் கள். நபி (ஸல்) அவர்கள், "உனது தந்தைக்கு இன்றைய நாளைக்குப் பிறகு எந்த துன்பமும் இல்லை" என்று கூறினார்கள். நபி (ஸல்) அவர்கள் வபாத்தான போது, "இறைவனின் அழைப்புக்கு பதிலளித்த என் தந்தையே! சுவர்க்கத்தில் தங்குமிடத்தை பெற்றுக்கொண்ட என் தந்தையே! உங்கள் மரணத்தின் செய்தி ஜிப்ரீலுக்கு

அறிவிக்கப் பட்ட என் தந்தையே!" என்று துயரத்துடன் கூறினார்கள். நபி (ஸல்) அவர்களை அடக்கம் செய்து முடித்த பின், "அனஸ்! நபி (ஸல்) அவர்களை பூமியில் அடக்கம் செய்து, அவர்களை மண்ணால் மூடி மறைத்ததை உங்களால் எப்படி தாங்கிக் கொள்ள முடிந்தது?" என கேட்டதாக அனஸ் (ரழி) அவர்கள் அறிவித்தார்கள். ஆதாரம் அல் புஹாரி.

நபி (ஸல்) அவர்கள், தன் புதல்வன் இப்ராஹிம் மரித்தபோது, "உனது மரணித்துக்காக நாங்கள் மனம் வருந்துகிறோம் இப்ராஹீமே!." என்று உரைத்தார்கள். இந்தச் சம்பவங்கள், அல்லாஹ் வின் ஆணைக்கு அதிருப்தி தெரிவிக்கும் நோக்கமாகவோ அல்லது அல்லாஹ்வுக்கு எதிராக முறையிடுவதாகவோ கருதப் படக் கூடாது. மாறாக இச் சம்பவங்கள் துயரத்தையும் கண்ணீரையும் சுட்டிக் காண்பிக்கும் செயல்களே.

**மனிதர்கள் ஒப்பாரியிட்டு கதறுவதால் மரித்தவர் துன்பத்துக்கு ஆளாகிறார்.**

உமர் இப்னு கத்தாப் (ரழி), அவரது மகன், மற்றும்அல் முகீரா இப்ன் ஷுபா (ரழி) ஆகியோர் அறிவித்த ஒரு ஸஹீஹான ஹதீஸில் மரித்தவருக்காக ஓலமிட்டு கதறும் செயலால் மரித்தவர் துன்பப் படுவதாக குறிப்பிடப்டுகிறது.

இந்த ஹதீஸை விளங்கிக் கொள்வதில் எவ்வித பிரச்சினையும் இருக்க கூடாது. அத்துடன் இந்த ஹதீஸ் குர்ஆனுக்கோ, ஷரீஆவின் அடிப்படை கொள்கைக்கோ மாற்றமாக இருப்பதாக கருதப் படக் கூடாது. ஒருவர் செய்த குற்றத்துக்காக இன்னொருவர் தண்டிக்கப் படக் கூடும் என இதன் பொருளல்ல. உறவினர்கள் ஓலமிட்டு கதறுவதன் காரணமாக மரித்தவருக்கு தண்டனை கொடுக்கப் படுவதாக நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடவில்லை. ஆனால் இதன் காரணமாக மரித்தவர் துன்ப மடைவதாகத் தான் குறிபிட்டார்கள். அதே போன்று, கப்ரில் இருக்கும் மரித்தவர், அடுத்த கப்ரில் இருக்கும் ஒருவருக்கு தண்டனை கொடுக்கப் படும் போது துன்பமடைகிறார். உயிருடன் இருக்கையில் அடுத்த வீட்டுக்காரர் ஏதேனும் தண்டனைக்கு ஆளாகும் போது இவர் துன்பப் படுவது போன்ற சம்பவத்தை இதற்கு உதாரணம் காட்ட முடியும். அதனால் மரித்தவரின் உறவினர்கள் ஜாஹிலிய்யா காலத்தின் மக்களைப் போல்அவரது புகழ் பாடி, கதறி ஒப்பாரியிடும் போது, அதன் காரணமாக மரித்தவர் துன்பப் படுவார். இது தான் இந்த ஹதீஸில் கூறப்படும் துன்பமாகும்.

## <u>பொறுமையும் நன்றி உணர்வும்</u>

### பொறுமை ஈமானின் பாதியாகும்

ஈமான் இரு பாதிகளை கொண்டுள்ளது. ஒன்று ஸப்ர் எனும் பொறுமை, மற்றது ஷுக்ர் எனும் நன்றி உணர்வு. அதனால் தான் அல்லாஹ் பொறுமைக்கு அருகில் நன்றி உணர்வையும் குறிப்பிட் டுள்ளான்.

"மிகுந்த பொறுமையுடனிருப்போர், அதிக நன்றி செலுத்துவோர் ஆகிய ஒவ்வொருவருக்கும் நிச்சய மாக இதில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன." சூரா கச; ரு

"நிச்சயமாக இதில் அதிகமாகப் பொறுமை யுடையோர், நன்றியுடையோருக்கு பல அத்தாட்சி கள் இருக்கின்றன." சூரா ஙக; ஙக

"பொறுமையுடையவர், நன்றி செலுத்துபவர் ஆகிய ஒவ்வொரு வருக்கும் நிச்சயமாக இதில் (பல) படிப்பினைகள் இருக்கின்றன." சூராங ச;கரு.

"அதிகமாகப் பொறுமை கொள்வோர், நன்றி செலுத்துவோர் ஆகிய ஒவ்வெருவருக்கும் நிச்சய மாக இதில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன." சூரா சஉ;ஙங

ஈமானின் ஒரு பாதி பொறுமை, மறு பாதி நன்றி உணர்வு என்று கூறுவதற்குரிய காரணங்களாவன;

1. ஈமான் என்பது வார்த்தை, செயல், நோக்கம் ஆகியவற்றை கொண்டுள்ளதோடு, இவை அனைத்தும் இரண்டு விடயங்களின் அடிப்படை யில் அமைந்துள்ளன. அவையாவன செயல் படுத்தல் அல்லது விலகி இருத்தல் என்பதாகும். செயல் படுத்தல் என்பது அல்லாஹ்வின் கட்டளைக்கு அமைய ஒரு காரியத்தை நிறை வேற்றல். இது நன்றி உணர்வின் உண்மை நிலையாகும். விலகி இருத்தல் என்பது அல்லாஹ் தடுத்த காரியங்ளை விட்டும் நீங்கி தூரமாக ஒதுங்குவதில் பொறுமை காட்டல். அதாவது அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்றல் மற்றும் அல்லாஹ் தடுத்தவைகளை விட்டும் நீங்கி ஒதுங்கி இருத்தல் என்ற செயல்கள் மதத்தில் முழுமையாக அடங்கியுள்ளன.

2. ஈமான் இரு தூண்களின் மீது எழுப்பப் பட்டுள்ளது. அவை திட நம்பிக்கையும் பொறுமையு மாகும். பின் வரும் குர்ஆன் வசனத்தை கவணிக்கவும்.

“மேலும், அவர்கள் பொறுமையாக இருந்த பொழுது நமது கட்டளைளைக் கொண்டு நேர்வழி நடப்பவர்களான தலைவர்களையும் அவர்களிடமி ருந்து நாம் ஆக்கினோம். அவர்கள் நமது

வசனங்களை உறுதி கொள்பவர்களாகவும் இருந்தனர்.” சூரா ௩௨;௨௪.

அல்லாஹ்வின் கட்டளைகள், அவன் தடுத்தவைகள், அவனது நற் கூலி, அவனது தண்டனை ஆகியவற்றின் உண்மை நிலையை இறை விசுவாசத்தின் மூலமே நாம் அறிகிறோம். பொறுமையை கடைபிடிப்பதன் மூலமே அவனது கட்டளைகளை நிறைவேற்றவும், அவன் தடுத்த வைகளை விட்டு விலகவும் எமக்கு சாத்திய மாகிறது. இறை விசுவாசமற்ற ஒருவரால் அல்லாஹ்வின் கட்டளைளை நிறைவேற்றவோ அல்லது தடுத்தவைகளை விட்டு விலகவோ ஒரு போதும் முடியாது. உண்மையிலேயே இந்த இறை விசுவாசம் அல்லாஹ்விடமிருந்தே எமக்கு கிடைத்தது. ஆகையால் பொறுமை இல்லா விட்டால் இவை எதனையும் எம்மால் சாதிக்க முடியாது. இதன் காரணமாக பொறுமை என்பது ஈமானின் ஒரு பாதியாகும். அடுத்த பாதி நன்றி உணர்வாகும்.

3. மனிதனின் நடத்தையை கட்டுப்படுத்தும் இரண்டு விதமான ஆற்றல்கள் அவனிடம் உள்ளன. ஒன்று ஒரு காரியத்தை செய்யும் ஆற்றல், மற்றது ஒரு காரியத்தை செய்யாது விலகி இருக்கும் ஆற்றல். இதன் அடிப்படையில் மனிதன், தான் விரும்பியதை

செய்வான், தான் விரும்பாததை விட்டு விலகியிருப்பான். மதம் என்பது ஒரு காரியத்தை செய்வது அல்லது விலகி இருப்பது. அதாவது அல்லாஹ்வின் கட்டளையை ஏற்று செயல் புரிவதும் அல்லாஹ் தடை செய்தவைகளை விட்டு விலகி இருப்பதும் ஆகும். பொறுமையில்லா விட்டால் இவை இரண்டையும் எவராலும் நிறைவேற்ற முடியாது.

4. பயம், எதிர் பார்ப்பு ஆகிய இரண்டும் முழுமையாக அடங்கியிருப்பது மதத்தில் தான். உண்மையான ஈமான் கொண்டவர் அல்லாஹ்வின் அருளை எதிர்பார்த்து, பயபக்தியுடன் இருப்பார்.

> “(நம்முடைய அருளை) ஆசித்தும், (நம் தண்டனையைப்) பயந்தும், நம்மை (பிரார்த்தனை செய்து) அழைப்பவர்களாகவும் இருந்தார்கள்.” சூரா உக; கூ0

“அல்லாஹ்வே! உன்னிடமே சரணடைந்தேன், உன் பக்கமே முகம் திரும்பினேன். யா அல்லாஹ்! எனது சகல காரியங்களையும் உனக்கே பொறுப்ப ளிக்கிறேன். உனது அருளை எதிர் பார்த்து, உனக்கு பய பக்தியுடன் உன்னிடமே பாதுகாப்பு

தேடுகிறேன்.” என்று நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தனை புரிவார்கள்.

ஆகையால், ஒரு விசுவாசி எதிர் பார்ப்பும், பய பக்தியும் உள்ளவராவார். ஆனால் எதிர் பார்ப்பும், பய பக்தியும் பொறுமையுள்ள மனிதரிடம் மாத்திரமே காண முடியும். பயபக்தி ஒரு விசுவாசிக்கு பொறுமையை கொடுக்க வேண்டும். அத்துடன் எதிர்பார்ப்பு அவருக்கு நன்றியுணர்வின் பக்கம் வழி காட்ட வேண்டும்.

5. மனிதன் செய்யக் கூடிய எந்த ஒரு செயலும் அவனுக்கு இவ்வுலகிலும் மறுமையிலும் நன்மை பயக்க கூடியதாக அல்லது தீங்கு விளைவிக்க கூடியதாக அமையும். இல்லாவிடில் அச்செயல் இவ்வுலகில் நன்மை கொடுத்தாலும், மறுமையில் தீங்கு விளைவிக்க கூடும். இதன் காரணமாக மறுமையில் நன்மை பயக்கும் காரியங்களில் ஈடுபடுவதும், மறுமையில் தீங்கு ஏற்படக் கூடிய காரியங்களில் ஈடுபடாது விழகுவதும் ஒரு மனிதனுக்கு சிறந்த வழியாகும். ஈமானின் உண்மை நிலை இதுவே. அதாவது தனக்கு நன்மையளிக்கும் காரியங்களை செய்யும் போது அவன் அவன் நன்றி உணர்வுடன் செயல் புரிகிறான். தனக்கு தீமை

விளைவிக்க கூடியவைகளில் இருந்து விலகும் போது அவன் பொறுமையை கையாளுகிறான்.

6. அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்ற வேண்டிய, அல்லது அல்லாஹ் தடுத்தவைகளை விட்டு நீங்கிட அல்லது அல்லாஹ்வின் நியதியை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் மனிதன் எப்போதும் வாழ்கிறான். இப்படிப்பட்ட எல்லா சந்தர்ப்பத்தையும் அம்மனிதன் பொறுமையுடனும் நன்று உணர்வுடனும் எதிர் நோக்க வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைகளை நிறை வேற்றுவது நன்றி உணர்வாகும். தடுக்கப் பட்டவைகளை விட்டு நீங்கி யிருப்பதும், அல்லாஹ்வின் நியதியில் திருப்தி அடைதலும் பொறுமையின் அடையாள மாகும்.

7. மனிதன் ஒன்றுக்கொன்று எதிரான திசைகளுக்கு எப்போதும் இழுக்கப் படுகிறான். இவ்வுலக ஆசைகள், இன்பங்களால் கவரப் படுவதா? அல்லது அல்லாஹ் அவனது நண்பனுக்காக (நல் மனிதருக்காக) தயார் செய்து வைத்திருக்கும் மறுமையின் நிலையான சுவன பதியை அடைய ஆசை வைப்பதா? இவ்வுலக ஆசாபாசங்களை நிராகரிப்பது பொறுமை என கருதப்படுவது போல்,

மறுமை வாழ்வுக்கும் அல்லாஹ்வின் அழைப்புக்கும் பதிலளிப்பது நன்றி உணர்வாகும்.

8. மதம் இரண்டு முக்கிய இலட்சியங்களை அடக்கியுள்ளது. ஒன்று மன உறுதி, மற்றது பொறுமையுடன் ஈடுபடும் விடா முயற்சி. இவ்விரண்டு விஷயங்களையும் ரசூல் (ஸல்) அவர்களின் துஆ குறிப்பிடுகிறது.

“யா அல்லாஹ்! எனது சகல காரியங்களிலும் விடா முயற்சியுடன் ஈடுபடவும், ஒடுக்கமான நேர் வழியில் இருப்பதற்காக மன உறுதியையும் உன்னிடமே கேட்கிறேன்.”

9. (ஹக் எனும்) உண்மையையும், ஸபர் எனும் பொறுமையையும் அடிப்படையாக் கொண்டது தான் மதம் என பின்வரும் குர்ஆன் வசனம் கூறுகிறது.

“.....சத்தியத்தை ஒருவருக்கொருவர் உபதேசம் செய்தும், பொறுமையை கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசிக்கிறார் களே...” (சூரா அல் அஸ்ர் **க0ஙீ;ஙீ)**

மனிதன் தன் விஷயத்திலும் மற்றவர் விஷயத்திலும் நேர்மையுடன் செயல் புரிய கடமை

பட்டுள்ளான். இது நன்றி உணர்வின் யதார்த்த நிலையாகும். ஆனால் பொறுமையின்றி இதனை சாதிக்க முடியாது. அதனால் தான் பொறுமை என்பது ஈமானின் பாதி என்று கூறப்படுகிறது. அல்லாஹ் சகல விஷயங்களையும் அறிந்தவன்.

**அல் குர்ஆன் கூறும் பொறுமை**

1. **அல்லாஹ்வின் கட்டளை. பொறுமை விசுவாசியின் மீது ஆணையாக்கப் பட்டுள்ளது**

"இன்னும் நீர் பொறுமையுடன் இருப்பீராக, இன்னும் உமது பொறுமை அல்லாஹ்வை கொண்டே தவிர இல்லை." சூரா அந் நஹல் கசூ; கஉஎ

"மேலும், (நபியே!) உமதிறைவனின் தீர்ப்பை (எதிர் பார்த்து) பொறுத்திருப்பீராக." சூரா அத் தூர் ருச;சஅ

2. **பொறுமைக்கு மாற்றமான அனைத்தும் தடுக்கப் பட்டுள்ளது.**

"நீரும் பொறுமையாக இருப்பீராக. (நிராகரித்த) அவர்களுக்க் காக நீர் அவசரப் பட் வேண்டாம்." சூரா அல் அஹ்காப் சகூ;நரு

"(விவாசம் கொண்டோரே!) நீங்கள் தைரியம் இழந்து விட வேண்டாம், கவலையும் பட வேண்டாம்." சூரா ஆல இம்ரான் ந;கநகூ.

“ஆகவே நீர் உமதிரட்சகனின் கட்டளைக்காகப் பொறுமையுடனிருப்பீராக. மேலும், மீனுடைய வரைப் போன்று (யூனுஸ்) நீர் ஆகி விட வேண்டாம். அவர் துக்கம் நிரம்பப் பெற்றவராக அழைத்த போது...” சூரா அல் கலம் சூகூ;சஅ.

3. **வெற்றிக்கும் செழிப்புக்கும் பொறுமை ஒரு நிபந்தனை.**

“விசுவாசம் கொண்டோரே! நீங்கள் பொறுமையை கடை பிடியுங்கள். மேலும், ஒருவருக்கொருவர் உறுதியாக இருந்துக் கொள்ளுங்கள். மேலும் எந்நேரமும் சித்தமா யிருங்கள். அல்லாஹ்வுக்கு பயந்து (நடந்துக்) கொள்ளுங்கள். நீங்கள் (இம்மையிலும் மறுமையிலும் ) வெற்றியடை வீர்கள்.” சூரா ஆல இம்ரான் ந;உ00.

4. **பொறுமையாளர்களின் கூலி இரட்டிப்பாக்கப் படும்.**

“அத்தகையோர் – அவர்கள் பொறுமையுடன் இருந்ததன் காரணத்தால், இரண்டு தடவை அவர்களது (நற்) கூலி கொடுக்கப் படுவார்கள்.” அல் கஸஸ் உஅ;ருச

“பொறுமையாளர்கள், தங்களுடைய கூலியை நிறைவு செய்யப் படுவதெல்லாம் கணக் கின்றியே தான்’ என்று நினைவு கூறுவீராக.” அல் ஜுமர் நகூ;க0

சுலைமான் இப்னு காசிம் (ரஹ்) எனும் அறிஞர் “ஒவ்வாரு நன்மைக்கும் உரிய கூலியை பற்றி தெரிய வந்துள்ளது. பொறுமைக்குரிய கூலியை தவிர, அது கொட்டும் பெரு மழையை போன்றது” என்று அறிவிக்கிறார்.

## 5. பொறுமையும் ஈமானும் மார்க்கத் தலைவர் களிடம் இருக்க வேண்டிய பண்புகளாகும்.

“மேலும் அவர்கள் பொறுமையுடன் இருந்த பொழுது, நம்முடைய கட்டளையைக் கொண்டு நேர் வழி நடப்பவர் களான தலைவர்களையும் அவர்களிலிருந்து நாம் ஆக்கினோம். அவர்கள் நம்முடைய வசனங்களை உறுதி கொள்பவர் களாகவும் இருந்தனர்.” சூரா அல் சஜதா ந௨;௨ச

## 6. அல்லாஹ்வின் சினேகத்தை பெறும் ஒரே வழி பொறுமை.

“ஆகவே நீங்கள் பொறுமையாக இருங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுள்ளோர் களுடன் இருக்கின்றான்.” சூரா அன்பால் அ;சசூ

அபு அல் தக்காக் என்ற அறிஞர் பின் வருமாறு அறித்தார். “பொறுமையுள்ள மனிதர்கள் தான் இவ்வுலகிலும் மறுமையிலும் உண்மையிலேயே வெற்றி பெற்றவர்களாவர். காரணம் அவர்கள் அல்லாஹ்வின் சினேகத்தை பொற்றவர்கள்.”

## 7. பொறுமையாளர்களுக்கு அல்லாஹ் மூன்று மடங்கு நற் கூலி வழங்குவான். அவையாவன அவனது ஆசீ, கருணை, நேர் வழி என்பவைகள்.

“...மேலும் இவற்றை பொறுத்துக் கொள்பவர்களுக்கு நீர் நன்மாராயம் கூறு வீராக. அவர்கள் எத்தகையோரென்றால், தங்களுக்கு ஏதேனும் ஒரு துன்பம் பீடித்தால், ‘நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்காகவே இருக்கின்றோம். நிச்சயமாக அவன் பக்கமே திரும்பிச் செல்பவர்களாக இருக்கிறோம்.’ என்று கூறுவார்கள். அத்தகையோர் - அவர்கள் மீது தான் அவர்களுடைய இரட்சகனிடமிருந்து நல்லாசிகளும், கிருபையும் ஏற்படுகின்றன. மேலும், அவர்கள் தாம் நேர் வழியையும் பெற்றவர்கள்.” சூரா பகரா உ; கடுடு- கடுள

சலபி ஒருவருக்கு ஒரு பெரும் துன்பம் ஏற்பட்ட போது, அவருக்கு ஆறுதல் கூற வந்த மக்களை நோக்கி அவர் இவ்வாறு கூறினார்.

“பொறுமையாளர்களுக்கு மூன்று நற் கூலிகளை கொடுப்பதாக அல்லாஹ் வாக்களித்திருக்கும் போது, நான் ஏன் பொறுமையை கடை பிடிக்க கூடாது? அவை ஒவ்வொன்றும் இவ்வுலகையும், இதில் உள்ள சகலவற்றையும் விட சிறந்ததாகும்.”

## 8. பொறுமை என்பது அல்லாஹ்வின் உதவியை பெறும் வழியாகும்.

“நீங்கள் பொறுமையை கொண்டும், தொழுகையை கொண்டும் (அல்லாஹ்விடம்) உதவி தேடுங்கள். சூரா பகரா உ; சடு

அதாவது பொறுமையற்றவர்களுக்கு எவ்வித உதவியும் இல்லை.

## 9. பொறுமையும் இறை பக்தியுமே அல்லாஹ்வின் உதவியும், ஆதரவும் பெறுவதற்குரிய நிபந்தனைகள்.

“ஆம். நீங்கள் பொறுமையுடனிருந்து பயந்தும் கொள்வீர்கள் என்றால், அந்நேரத்தில் உங்களிடம் எதிரிகள் தாக்க வந்த போதிலும், போர்க் குறிகள் கொண்ட வர்களான மலக்குகள் ஐயாயிரத்தைக் கொண்டு உங்கள் இரட்சகன் உங்களுக்கு உதவி செய்வான்.” சூரா ஆல இம்ரான் ந;கஉடு.

**10. பொறுமையும் இறை பக்தியும் எதிரிகளின் தந்திரங்களில் இருந்து பெரும் பாதுகாப் பளிக்கும்.**

“நீங்கள் பொறுமையுடனிருந்து (அல்லாஹ்வை) பயந்து கொள்வீர்களாயின், அவர்களுடைய சூழ்ச்சி உங்களுக்கு யதொரு தீங்கையும் விளைவித்திடாது.” சூரா ஆல இம்ரான் ௩;கஉ0.

**11. சுவர்க்கத்தில் இருக்கும் பொறுமையாளர் களுக்கு மலக்குகள் சலாம் கூறுவார்கள்.**

“மலக்குகள் ஒவ்வொரு வாசலிலிருந்து அவர்களிடம் பிரவேசிப்பார்கள். நீங்கள் (வாழ்க்கையில் கஷ்டங் களை) பொறுத்துக் கொண்ட காரணமாக உங்களுக்குச் சாந்தி உண்டாவதாக. (இந்த) கடைசி வீடு மிக்க நல்லதாயிற்று (என்று கூறுவார்கள்) சூரா அர் ரஅத் க௩;உ௩-உச.

12. எதிரிகள் எம்மை நடத்தியது போல அவர்களையும் நடத்த அல்லாஹ் எமக்கு அனுமதி அளித்துள்ளான், ஆனால் பொறுமையை பேணுவது சிறந்தது எனவும் கூறியுள்ளான்.

“விசுவாகளே! நீங்கள் தண்டிப்பதாக இருந்தால் எந்த அளவுக்கு நீங்கள் தண்டிக்கப் பட்டீர்களோ,

அது போன்ற அளவுக்கு தண்டியுங்கள். (தண்டிக்காது) பொறுத்துக் கொள்வீர்களாயின் நிச்சயமாக அது பொறுமையாளர்களுக்கு மிகச் சிறந்ததாகும்." சூரா அந் நஹல் கசூ;கஉசூ.

**13. அல்லாஹ்வின் மன்னிப்பும், நற் கூலியும் கிடைப்பதற்குரிய நிபந்தனைகள், பொறுமை யும் நற் காரியங்களுமே.**

"(துன்பங்களை சகித்து) பொறுத்துக் கொண்டு, நன்மையான காரியங்களை செய்தும் வருகின்றார்களே அத்தகையவர்களை தவிர, அத்தகையோர், அவர்களுக்கு மன்னிப்பும், மாபெரும் (நற்) கூலியும் உண்டு." சூரா ஹூத் கக;கக.

**14. ஒருவர் தனது காரியங்களை செய்வதில் காட்டும் பொறுமை அவரது தைரியத்தையும் உறுதியையும் எடுத்துக் காட்டும்.**

"மேலும், எவரொருவர் (பிறரால் பாதிக்கப் பட்ட பின்) பொறுத்துக் கொண்டு மன்னித்து விட்டால், நிச்சயமாக இது காரியங்களில் உறுதியானதாகும்." சூரா அஷ்ஷூஅரா சஉ;சங.

"எனது மைந்தனே!... நீ நன்மையை கொண்டு (பிறரை) ஏவுவாயாக. பாவமான காரியங்களி

லிருந்து விலக்குவாயாக. மேலும் உனக்கேற் படும் கஷ்டங்களை, நீ பொறுமையுடன் சகித்துக் கொள்வாயாக. நிச்சமாக இது காரியங்களில் உறுதி யானதில் உள்ளதாகும்.” சூரா லுக்மான் ௩க;கஎ.

**15. மூமின்களின் பொறுமையின் காரணமாக அவர்களுக்கு உதவியும் வெற்றியும் கொடுப்பதாக அல்லாஹ் வாக்களித்தி ருக்கிறான்.**

“...மேலும்இஸ்ராயிலின் மக்கள் மீது, அவர்கள் பொறுமை யுடன் இருந்த காரணமாக உம் இரட்சகனின் அழகிய வாக்கு பரபூரண மாகியது.” சூரா அல் ஆரப். எ;க௩எ

**16. அல்லாஹ்வின் நேசத்தை பெறுவதற்கு பொறுமையை ஒரு நிபந்தனையாக வைத்தான்.**

“மேலும் எத்தனையோ நபிமார்கள், அவர்களுடன் அல்லாஹ் வின் நல்லடியார்கள் கொண்ட அநேகம் பேர் சேர்த்து (அல்லாஹ் வின் பாதையில்) யுத்தம் செய்திருக்கின்றனர். ஆனால் அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் தங்களுக்கு ஏற்பட்டவற்றின் காரணமாக அவர்கள் தைரியமிழந்து விடவில்லை. (எதிரிகளுக்கு) ஐக்கியப் பட்டு விடவுமில்லை. மேலும், (துன்பங்களை சகித்துக் கொள்ளும்)

பொறுமையாளர்களை அல்லாஹ் நேசிக்கி றான்.” சூரா ஆல இம்ரான் ங;கசகூ

## 17. அல்லாஹ்வின் அனேக பாக்கியங்களை அடைவதற்கு பொறுமையை நிபந்தனையாக்கி இருக்கின்றான்.

“பொறுமையாய் இருந்தார்களே அத்தகை யோரை தவிர (வேறு) எவரும் அதனை அடைய மாட்டார்கள். மேலும் மகத்தான பாக்கியத் தையுடையோரை தவிர (மற்ற) எவரும் அதனை அடைய மாட்டாகள்.” சூரா புஸ்ஸிலாத் சக;ங௫

## 18. பொறுமையும் நன்றியுணர்வும் கொண்டவர்கள் மாத்திரம் அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் நன்மை பெறுவார்கள்.

“அல்லாஹ்வின் அருட்கொடையை கொண்டு கடலில் கப்பல் மிதந்து செல்வதை நீர் காணவில்லையா? நிச்சயமாக இதில், அதிகமாக பொறுமையுடையோர், நன்றி செய்வோருக்கு பல அத்தாட்சிகள் இருக்கின்றன.” சூரா லுக்மான் ஙக;ஙக

“இன்னும் மலைகளை போன்று கடலில் செல்லும் கப்பல்களும் அவனுடைய அத்தாட்சி களில் உள்ளவையாகும். அவன் நாடினால் காற்றை

நிறுத்தி விடுவான். அப்போது அதன் மேல் பரப்பின் மீது (அசைவற்று) நின்றவை யாக அவை ஆகி விடும். அதிகமாக பொறுமை கொள்வோர், நன்றி செலுத்துவோர் ஆகிய ஒவ்வொருவருக்கும் நிச்சயமாக இதில் பல அத்தாட்சி கள் உள்ளன." சூரா அஷ் ஷுஅரா சஉ; ௩௨, ௩௩

## 19. அய்யூப் நபியின் பொறுமையை அல்லாஹ் போற்றுகிறான்.

"நிச்சயமாக நாம் அவரை மிக்க பொறுமையானவராகவே கண்டோம். (அவர்) மிக்க நல்லடியார். நிச்சயமாக அவர் (நம் பால்) அதிகமாக மீளக் கூடியதராக இருந்தார்." சூரா சாத் ௩அ;சச

அய்யூப் (அலை) அவர்களின் பொறுமயின் பொருட்டால் அவர்களை சிறந்தவர் என்று கூறுகிறான். ஆகையால் தேவையான சந்தர்ப் பத்தில் பொறுமையிழக்கும் மனிதன் தோழ்வி யடைந்தவனாக, பாவம் செய்தவனாக கருதப் படுகிறான்.

## 20. ஈமானற்ற மக்கள் சத்தியத்தையும் பொறுமையையும் விட்டு நீங்கியவர்களென அல்லாஹ் கூறுகிறான். இதன் படி பொறுமை

**யாளர்களே உண்மையிலேயே வெற்றி பெற்றவர்கள்.**

“காலத்தின் மீது சத்தியமாக; நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான். விசுவாசம் கொண்டு, நற்கருமங்களை செய்தும், சத்தியத்தை ஒருவருக்கொருவர் உபதேசம் செய்தும், பொறுமையை கொண்டும் ஒவருக் கொருவர் உபதேசிக்கிறார்களே அத்த யோரை தவிர.”சூரா அல் அஸர் க0ரு; க-ரு

இந்த சூராவை பற்றி விளக்கம்செய்யும் போது இமாம் அஷ் ஷாபி (ரஹ்) இவ்வாறு கூறினார்கள்.

‘இந்த சூராவை பற்றி மக்கள் ஆழ்ந்து சிந்தித்தால், இது தேவையான நேர் வழியை காட்டும். அவனது அறிவு, செயல் -அதாவது ஈமான், நல் அமல் ஆகிய இரண்டும் சம்பூர்ணமடையும் வரை மனிதன் பூரண நிலையை அடைய முடியாது. மனிதன், தானும் பூரண நிலையை அடைய வேண்டிய அதே நேரத்தில் மற்றவர்களையும் பூரண நிலைக்கு கொண்டு செல்ல வேண்டும். அதாவது சத்தியத்தை ஒருவருக்கொருவர் கற்றுக் கொடுக்க வேண்டும். இவை அனைத்துக்கும் அடிப்படை பொறுமை யாகும்.’

**21. விமோசனம் பெற்றவர்களின் முக்கிய பண்பு பொறுமையும் கருணையுமாகும் என அல்லாஹ் அறிவிக்கின்றான்.**

“பின்னர் விசுவாசம் கொண்டு, பொறுமையை கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசம் செய்தும், அன்பு செலுத்துமாறு ஒருவருக் கொருவர் உபதேசம் செய்துக்கொண்டும் இருந் தோரில் உள்ளவராக அவர் இருப்பதாகும்.” சூரா அல் பலத் கூ0;கஎ

**22. இஸ்லாம், ஈமான் ஆகியவையின் பிரதான தூண்களுடன் பொறுமையையும் சேர்த்து அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான்.**

தொழுகையுடன் சேர்த்து இவ்வாறு குறிப்பிட்டுள்ளான்.

“நீங்கள் பொறுமையை கொண்டும் தொழுகையை கொண்டும், (இரட்சகனிடம்) உதவி தேடுங்கள். நிச்சயமாக அதுவே உள்ளச்சம் கொண்டவர்களுக்கன்றி (ஏனையோ ருக்கு) மிகப் பாரமானதாகும்.” சூரா பகரா உ;சரு

நல் அமலுடன் சேர்த்து இவ்வாறு குறிப்பிட்டுள்ளான்.

“(துன்பங்களை சகித்து) பொறுத்துக் கொண்டு, நன்மையான காரியங்களை செய்தும் வருகின்றார்களே அத்தகையவர்களை தவிர. அத்தகையோர், அவர்களுக்கு மன்னிப்பும், மாபெரும் (நற்) கூலியும் உண்டு.“ சூரா ஹூத் கக;கக

நன்றி உணர்வுடன் சேர்த்து இவ்வாறு குறிப்பிட்டுள்ளான்.

“இன்னும் மலைகளை போன்று கடலில் செல்லும் கப்பல்களும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவையாகும். அவன் நாடினால் காற்றை நிறுத்தி விடுவான். அப்போது அதன் மேல் பரப்பின் மீது (அசைவற்று) நின்றவையாக அவை ஆகி விடும். அதிகமாக பொறுமை கொள்வோர், நன்றி செலுத்துவோர் ஆகிய ஒவ்வொருவருக்கும் நிச்சயமாக இதில் பல அத்தாட்சி கள் உள்ளன.” சூரா அஷ் ஷுஅரா சஉ;ஙஉ,ஙங

உண்மையுடன் சேர்த்து இவ்வாறு குறிப்பிட்டுள்ளான்.

“காலத்தின் மீது சத்தியமாக, நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான். விசுவாசம் கொண்டு, நற்கருமங்களை செய்தும், சத்தியத்தை ஒருவருக்கொருவர் உபதேசம் செய்தும், பொறுமையை கொண்டும் ஒவருக் கொருவர்

உபதேசிக்கிறார்களே அத்தகை யோரை தவிர." சூரா சூரா அல் அஸர் க0ங;க-ங

"...உண்மையே கூறும் ஆண்களும், உண்மையே கூறும் பெண்களும்,பொறுமையாளர்களான ஆண்களும்,பொறுமையாளர்களான பெண்களும், உள்ளச்சத்தோடு நடக்கும் ஆண்களும், உள்ளச்சத்தோடு நடக்கும் பெண்களும்..." சூரா அல் அஹ்சாப் ஙங;ஙரு

கருணையுடன் சேர்த்து இவ்வாறு குறிப்பிட்டுள்ளான்.

"பின்னர் விசுவாசம் கொண்டு, பொறுமையை கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசம் செய்தும், அன்பு செலுத்துமாறு ஒருவருக்கொ ருவர் உபதேசம் செய்துக் கொண்டும் இருந்தோரில் உள்ளவராக அவர் இருப்பதா கும்." சூரா அல் பலத் கூ0;கஎ

ஈமானுடன் சேர்த்து இவ்வாறு குறிப்பிட்டுள்ளான்.

"பின்னர் விசுவாசம் கொண்டு, பொறுமையை கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசம் செய்தும், அன்பு செலுத்துமாறு ஒருவருக்கொ ருவர் உபதேசம் செய்துக்கொண்டும் இருந்தோ ரில்

உள்ளவராக அவர் இருப்பதாகும்.” சூரா அஸ் ஸஜ்தா ௩௨;௨௪.

அல்லாஹ்வின் அன்பை, அவனது சினேகிதத்தை, அவனது உதவியை, அவனது ஆதரவை, மற்றும் அவனது நற்கூலியை அடைவதற்கு பொறுமையை அல்லாஹ் இலேசான வழியாக அமைத்தி ருக்கிறான். இவை மனிதனுக்கு அளிக்கப் பட்ட மாபெரும் கௌரவமும், அருளும் ஆகும்.

(தொடரும்)